தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 21-6-58 | சனிக்கிழமை | இதழ் 1

198386

24 JUN 1958

MADRAS



ஜூன் ௨௨- இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாள்!

★ தமிழ்நாட்டில் செட்டிநாடு ★

தமிழகத்தின் பண்டைப் பெருமிதத்தை இன்றும் காணக்கூடிய இடம் முகவை மண்டலமாகும். பகைவரை அறஒழித்து அறம்வளர்த்த மறவர்குல மக்களும், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக கடல் வாணிபத்தில் புகழ்பெற்ற தனவணிகர்களும் பழந்தமிழ் இன்பத்தை இன்றும் அங்கே நுகர்ந்துகொண்டிருக்கின்றனர். தமிழ் உலகில் வழக்கழிந்துபோன பல சொற்களை இன்றும் அங்கே கேட்கலாம். பண்டைத் திராவிடரின் திருமண முறை செவ்வனே கையாளப்பட்டு வருவது செட்டிநாட்டில் தான். கல்வியறிவற்றவர்களும், குழந்தைகளும்கூட ஏராளமான பழந்தமிழ்ச் சொற்களை வழக்கில் பயன்படுத்தும் இடம் செட்டிநாடு. இலக்கியத்திலும், வரலாற்றிலும் மட்டுமே காணக்கூடிய சில காட்சிகளை செட்டிநாட்டில் இன்றும் காணலாம்.

செட்டிமார்களின் பூர்வீகத்தைப் பற்றிய வரலாறு தெளிவாக இல்லை. எனினும் இவர்கள் ஆதியில் காவிரிப்பூம்பட்டினத்தில் குடியிருந்தவர்கள் என்றும், காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகச் செழிப்பிற்கு இவர்களது வாணிபத்திறமை காரணமாக இருந்தது என்றும் வரலாற்றின் வாயிலாக நாம் அறிகிறோம். காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டபோது இவர்கள் அங்கிருந்து சிதறி பாண்டியநாட்டுக்கு ஓடிவந்தார்கள். மறவர்களுக்குச் சொந்தமான பாண்டிய மண்ணில் பல நகரங்களை உண்டாக்கிக் குடியேறினார்கள். இதனால்தான் பாண்டியநாட்டு மறவர்களுக்கு நாட்டார் என்ற பெயரும், செட்டிமார்களுக்கு நகரத்தார் என்ற பெயரும் வந்தன என்பர் சிலர். சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் மன்னர்களின் முடிசூட்டு விழா இவர்கள் இல்லாமல் நடப்பதில்லையாம். வைசியர்கள் குடும்பத்தோடு வந்தபிறகுதான் முடிசூட்டு விழா நடக்குமாம். அந்நாளிலும் தமிழ்ப் புலவர்களைப் போற்றி வளர்த்த பெருமை இவர்களுக்கு உண்டு. இன்றும் பெரும்பாலான செட்டிமார்கள் தமிழ் இலக்கியங்களை வழுவறக் கற்றவர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தில் சைவப் படையெடுப்பு நேர்ந்த காலங்களில் அந்தச் சமயம் இவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். அதிலிருந்து சைவப் பற்றுதலைக் குல முறையாகவே இவர்கள் வளர்த்திருக்க வேண்டும். இன்றும் சைவசமயச் சார்பினர் நெல்லை மாவட்டத்திலும், செட்டிநாட்டிலுமே அதிகம். வழக்கிலுள்ள ஒரு கதை திருநெல்வேலிக்கும், செட்டி நாட்டுக்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகிறது. ஒரு பாண்டிய மன்னன் காலத்தில் செட்டிமார்களின் பெண்மக்கள் எல்லோரும் இறந்துபோயினராம். பாண்டிய மன்னன் ஆணைப்படி திருநெல்வேலிச் சைவக் குடும்பங்களில் இவர்கள் பெண் எடுத்தனராம். இன்றையச் செட்டிநாட்டின் தாய்மார்கள் அந்த வழியினர் தானும். இது உண்மையாக இருக்கலாம் என்பதற்கு ஆதாரமாகச் சிலவற்றைக் காணலாம். பெண்களை ஆச்சி என்று அழைப்பது இந்த இரு பகுதிகளில் மட்டுமே இருந்து வருகிறது. கிட்டத்தட்ட இவர்களுக்குள் உருவ

1. பொட்டுவைத்துப் பூமணமிடுதல்.
2. கைபிடிச் சோறும், தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தலும்.

3. குதிரை ஏறி ஊர்வலம் வருதல்.
4, 5, 6. பெண்ணிற்குரிய சீதனச் சொத்துக்கள்.

செட்டிநாட்டுத் திருமணம்

ஒற்றுமை இருக்கிறது. காதுகளை நீளமாக வளர்க்கும் முறையும், அணிமணிகள் அணியும்விதமும் ஒன்றாக இருக்கின்றன. குறிப்பிட்ட சில தமிழ்ச்சொற்கள் இந்த இரண்டு பகுதிகளில் மட்டுமே வழங்கப்பெறுகின்றன.

பொதுவாகவே, தமிழ் மன்னவர் குலத்தோடு தனவணிகர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. மன்னனுக்கு மரியாதை செலுத்துவதற்காக இவர்கள் சில வழக்கங்களைக் கையாண்டனர். வெகு காலம் வரை செட்டிநாட்டுத் திருமணச் சாப்பாடுகளில் முக்கனி போடக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஏதேனும் இரண்டு கனிகளைத்தான் பரிமாறுவார்கள். மன்னர்களின் விருந்துகளில் மட்டுமே முக்கனி போடப்பட வேண்டும் என்ற மரியாதை உணர்ச்சி காரணமாக இருந்திருக்கலாம்.

கடல் கடந்து இவர்கள் வாணிபம் செய்வதை 'கொண்டுவிக்க'ப் போவது என்று குறிப்பிடுவார்கள். பழநாட்களில் தமிழகத்திலிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு போய் கடல் கடந்த பகுதிகளில் விற்று வந்தவர்கள் இவர்களாக இருந்திருக்க வேண்டும். வெளிநாட்டுப் பொருள்களைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்தவர்களும் இவர்கள்தான். மலேயா, பர்மா, [illegible]கை போன்ற நாடுகளின் [illegible]திப்பிற்கு ஆயிரக் [illegible]டுகளாகவே [illegible]

கண்ணதாசன்

ஆயுள் முழுக்கப் பயன்படும். தாயின் சொத்து மகளுக்கு, தகப்பன் சொத்து பிள்ளைக்கு என்ற முறை பல நூறு ஆண்டுகளாகவே செட்டிநாட்டில் இருந்து வருகிறது. தமிழுலகில் பெருவாரியாகப் புகுந்துவிட்ட வடமொழிச் சொற்கள், செட்டிநாட்டில் அந்த அளவுக்குப் புகவில்லை என்பதைச் செட்டிநாட்டுத் திருமணங்களில் கண்டு தெளியலாம். பண்டை நாட்களில் உப்பு வாணிபம் பல நாடுகளுக்கும் இவர்கள் மூலமே நடந்து வந்திருக்கிறது. இன்றும் செட்டிநாட்டுத் திருமணங்களில் உப்பு முதலிடம் வகிக்கிறது.

பாண்டிய மண்டல மறவர் மக்களை 'ஐயாக்கள்' என்று இவர்கள் அழைப்பார்கள். வெற்றிலை பாக்கு வைத்துத் திருமணங்களுக்கு அவர்களை அழைப்பார்கள். மறவர்களைத் தங்கள் தலைவர்களாகவே இவர்கள் மதித்தார்கள். பிறரோடு சண்டை போடும்போது இன்றுகூட 'நீ என்ன ஐயாவோ?' என்று கேட்பார்கள். மறவர் பெண்களை உறவு முறை வைத்தே அழைப்பார்கள். நீண்ட நாட்களாகவே [illegible] வலிமையால், [illegible] க்காத்த

ணம்மை என்று ஆக்கி, தங்கள் பெண்களுக்குச் சூட்டுகிறார்கள். செட்டிநாடு முழுவதிலும் கண்ணம்மை, கண்ணுத்தா என்ற பெயர்கள் அதிகம். பிறர்மீது ஆத்திரமாகப் பேசும்போது 'அந்தக் கண்ணுத்தாள் உன்னைக் கேட்பாள்' என்பார்கள். இவர்கள் தங்கள் குலதெய்வமாக வழிபடும் கண்ணுத்தாள் கண்ணகிதான் என்பதில் தடையில்லை. கீழக்கோட்டைக் காளி என்று அழைக்கப்படும் தெய்வத்திடம் இவர்களுக்கு மரியாதைஅதிகம். சிலப்பதிகாரத்தில் மாசாத்துவான் என்ற பெயர் வருகிறது. சாத்தன், சாத்தப்பன் என்ற பெயர்கள் செட்டிநாட்டில்தான் காணப்படுகின்றன. சீத்தலைச் சாத்தனார் இவர்கள் வழியினராக இருக்கவேண்டும் என்று கருதுவோரும் உண்டு. ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்புலவர் செட்டிநாட்டு ஒக்கூரைச் சார்ந்தவர் என்றும், வணிக குலத்தவர் என்றும் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். பட்டினத்தடிகள் நகர வைசிய மரபினரே. அவருடைய பாடல்களில் ஆத்தாள் என்ற வார்த்தை தாயைக் குறித்து அழகுபட வருகிறது. பொதுவில் தமிழ்உலகில் செ[illegible] [illegible] வெகு காலமாகப் பயன்

செட்டிநாட்டில் பிணப்பந்தலையே குறிக்கும்; மணப் பந்தலை அன்று. மங்கலச் சொற்களாக, "கொட்டகை", "காவணம்" என்பவையே வழங்குகின்றன. "இலக்கியத்தில் ஆளப்படுகின்ற காவணம் என்ற அருஞ்சொல் செட்டிநாட்டில் பழக தமிழாய்ப் பயில்கிறது" என்கிறார் சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை.

"முந்தாணி" என்ற சொல் செட்டிநாட்டிலும் வேறு சில இடங்களிலும் வழங்குகிறது. "முன்தானை" என்பதே இவ்வாறு மருவியிருக்கிறது. இச்சொல், முந்தாங்கி என்றும் வழங்கும். இதே பொருளில் "தோமாலை" என்ற சொல்லும் பயன்படுத்தப் பெறுகிறது.

செட்டி வீடு என்று பிறர் சொல்லுவதைச் செட்டிநாட்டில், "செட்டிய வீடு" என்று ஆறும் வேற்றுமை உருபு தெரியும்படி சொல்லுவது வழக்கம். இதைப் போலவே, அகம்படியார் வீடு என்பதை "அகம்படிய வீடு" என்பர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பகுதிகளில் "ஓய்" "காணும்" என்ற சொற்களைப்போல, செட்டிநாட்டில் "என்னங்றேன்" என்பது விளிப் பொருளில் வழங்கி வருகிறது.

ஒருவர் மற்றொருவருக்கு ஒரு பொருளைக் கொடுத்தால், "எனக்குத் தந்தான்" "அவனுக்குக் கொடுத்தான்" என்று சொல்லுவதுதான் இலக்கண மரபு. "எனக்குக் கொடுத்தான்" என்றோ, "அவனுக்குத் தந்[illegible]

[illegible] தீட்டுகிறா[illegible] ஒரு பத்திரிகைக்குக் கிடைக்க வேண்டிய எல்லா ஆதரவுகளும் தென்றலுக்குக் கிடைத்திருக்கிறது.

கேரளத்திலே தென்றலைப்பற்றிப் பேசுகிறார்கள்; வரவேற்கிறார்கள். கன்னடப் பகுதியிலே தென்றலுக்கு அமோக வரவேற்பு இருக்கிறது. தமிழகத்தில் இல்லந்தோறும் 'தென்றல்' வீசுகிறது. இதற்குமேல் ஒரு வார இதழுக்கு என்ன வேண்டும் பெருமை!

பத்திரிகைத் தொழில்—எதிர்காலம் சுவையுள்ளதாக அமையும் என்ற நம்பிக்கையோடு தொடங்கும் தொழில் அல்ல. எந்த நேரத்தில் என்ன ஆபத்து வரும் என்று தீர்மானித்துக்கொண்டிருக்கமுடியாத பயங்கரமான தொழில். வேட்கையும், பொது நோக்குள்ளவர்களும் தவிர, மற்றவர்களால் பத்திரிகைத் தொழிலை நடத்துவதற்கு இயலாது. அதுவும், குறிப்பிட்ட ஒரு கொள்கைக்காக நடத்தப்படும் கட்சிப் பத்திரிகை என்றால் துயரத்திற்கு அளவிருக்காது. விறுவிறுப்பான செய்திகள் கிடைக்காது; அது கிடைத்தாலும் ஏஜண்டுத் தோழர்களிடமிருந்து பணம் வராது; அதுவும் வந்துவிட்டாலும் பத்திரிகைக் காகிதம் கிடைக்காது. ஆனால் எது வந்தாலும் வராவிட்டாலும் பத்திரிகை வெளியாக வேண்டிய கிழமை மட்டும் தவறாமல் வந்துவிடும். எப்படியும் அன்று பத்திரிகை வந்தாக வேண்டும். இத்தனை தொல்லைகளுக்கிடையே, 'தென்றல்' நான்காண்டுகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டிருக்கிறது.

தென்றல் ஆற்றிய பணிகளில், தலையாய பணி, இளைஞருலகில் ஒரு கவிஞர் பரம்பரையை உண்டாக்கியதுதான். தென்றல் நடத்தி வரும் வெண்பாப் போட்டி தமிழின் எழுச்சிக்கு அமைந்த தூண்டுகோல்களில்முதன்மையானது என்றால், இது தற்பெருமையாகாது. தென்றல்–அதனுடைய நினைவாக ஆயிரம் வெண்பாக்களைத் தொகுத்து நூல் வடிவாக்கித் தமிழகத்திலே பவனி வரச் செய்திருக்கிறது. காலத்தால் அழியாத இலக்கியச் செல்வமாய் அமைந்திருக்கும் அந்நூல் தென்றலின் பெயர் கூறி உலா வந்துகொண்டிருக்கிறது. மேலும், நாடகம், நாவல், காவியம் ஆகிய துறைகளில் ஆற்றல் பெற்ற இளைஞர்களை தமிழகத்திற்கு அறிமுகம் செய்வித்து அவர்களுக்குப் பரிசளித்துப் பாராட்டிப் பெருமைபடுத்தியிருக்கிறது.

தென்றல்–அதனுடைய சென்ற காலத்தில் யாருக்காகவும் வளைந்து கொடுத்து உண்மையை விழுங்கியது இல்லை. மதவாதிகளை எதிர்க்க–பிற்போக்குத்தனத்தை முறியடிக்க தி. மு. கழகம் கையாண்டு வரும் புரட்சிக் கணைகளை எவருக்கும் அஞ்சாமல் பிரயோகித்த பெருமை தென்றலுக்கு உண்டு. இலக்கியத் துறையில் உருவாகும் சர்ச்சைகளுக்கு விளக்கம் கொடுத்து எதிரிகளை உட்கார வைத்ததும் தென்றல்தான். ஆத்திகத்தலைவர்களின் மனம் கோணியது; அரசியலார் அலுவலகத்தை அலசினார்கள். என்றாலும் தென்றல் தொடர்ந்த பணியினை நிறுத்தவில்லை. எந்த நேரத்திலும், புராண, இதிகாசப்பிரியர்களின் அறைகூவல்களை ஏற்று எதிர்வாதம் கிளப்பத் தயாராக இருக்கிறது தென்றல்.

தொடங்க இருக்கும் தென்றலின் ஐந்தாவது பிராயத்தில் மேலும் மேலும் புதிய அம்சங்களைத் தமிழருக்குப் படைக்க நாங்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். முயற்சி வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை. சென்ற நான்காண்டு காலத்தில் தென்றலோடு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களது ஒத்துழைப்புத் தொடர்ந்து கிடைக்குமென்று நம்புகிறோம். வணக்கம்.

★ ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எல். ஏ[illegible]

அல்ல. தமிழிலே பேசுகிறோம், எழுதுகிறோம், தமிழ்மொழிக்காகக் கஷ்டப்படுகிறோம். சிறைக்குப் போகிறோம். இன்னும் என்னென்னமோ செய்கிறோம். செய்யாதவர்களைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், செய்கிறவர்களையாவது அவர்கள் திட்டாமல் இருக்கிறார்களா? பிரிவினைசக்தி என்கிறார்கள், மொழிவெறி என்கிறார்கள், குறுகிய நோக்கம் என்கிறார்கள்.

தாய்மொழிக்காக நாம் பாடுபடுவதால்தான், தாய்நாடு என்றால் என்ன, அதனுடைய பூர்வீக வரலாறு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மற்ற கட்சிக்காரர்கள் ஏன் தாய்நாட்டைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை? காரணம் தமிழ்மொழியின்மீது அவர்களுக்கு அக்கறை இல்லை. இதுதான் காரணம். இந்தியாதான் தாய்நாடு என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தெரிந்த அளவில் நூற்றில் ஒரு பங்குகூட மற்ற கட்சிக்காரர்களுக்கு தமிழ்நாட்டைப் பற்றித் தெரியாமற் போனதற்குக் காரணமே 'இந்தியா இந்தியா' என்று அடித்துக் கொள்வதுதான்,

தமிழைப் பற்றி அதிகம் தெரிந்துகொண்டதன் விளைவாகத்தான் நாம் 'ஜாதி'யைப் பற்றி வன்மையாகக் கண்டித்துப்

இருந்தது. உடனே [illegible] பிங்கர் (Lady's-finger[illegible] பெயரிட்டான்.

முருங்கக்காய் முரச[illegible] குச்சிபோல் இருந்தது. [illegible] டிரம்ஸ்டிக் (Drum-stick) [illegible] பெயரிட்டான். வெள்ளைக்கார[illegible] தமிழ்நாட்டுக்கு வந்தான். ஆங்கில அகராதியில் இரண்டு வார்த்தைகளைச் சேர்த்தான்.

இதுபோலத்தான் 'ஜாதி' என்பது. ஜாதி என்பது தமிழ்ச்சொல் அல்ல. வடசொல்! வடசொல் தமிழில் கலந்தது, தமிழில் 'ஜாதி' புகுந்தது. 'ஜாதி' என்ற பாகுபாடு தமிழகத்தில் இருந்திருந்தால் 'ஜாதி' என்று தமிழ்மொழியில் இருந்திருக்க வேண்டும். தெய்வபக்தி மிகுந்த தமிழ்ப் புலவர்களிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள். 'ஜாதி' தமிழில் இல்லையென்றுதான் சொல்லுவார்கள். வெள்ளையர் நாட்டிலே இல்லாத வெண்டைக்காய் அவனது அகராதியிலே புகுந்தது. தமிழகத்திலே இல்லாத 'ஜாதி' தமிழ் அகராதியில் புகுந்தது. தமிழைக் கற்றதால்தான்–அதைக் காக்க எண்ணுவதால்தான் 'ஜாதி' வடவர்களால் புகுத்தப்பட்டது என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடிந்தது. இதை மற்றவர்கள் உணரமுடியாமற் போனதால்தான் 'ஜாதி'யை அவர்கள் கண்டிக்க முடியவில்லை. ★

வரலாறுகளில் வரும் இதுபோன்ற ஓலைகள், அது சம்மந்தப்பட்டவர்களைக் குழப்பியிருக்கிறது. ஆனால் சிங்கப்பெருமாள் அம்பலகாரரை இந்த ஓலை பலவாருகக் குடைந்தது.

“ஐயோ குஞ்சரம்! உன் அழகை அழிக்கப்போகிருர்களா? பாவிகளே! மலரைக் கிள்ளி மகிழ்வதிலே மலடிக்கு என்ன மகிழ்ச்சியோ!”

“இல்லை! இது பொய் ஓலை! மான் கொம்புதான் இறந்துவிட்டானே!

“டேய் மான்கொம்பு! நன்றி கெட்டவனே! நான் கற்றுக்கொடுத்த சிலம்பாட்டத்தை என்னிடமே காண்பிக்கிருயா?”

“கன்றுக்குட்டிபோல் வளர்ந்த வனைவாட்டிய உம்மை, நீர் கற்றுக்கொடுத்த வித்தையாலேயே வீழ்த்துகிறேன். என் மகளைத் துடிக்க வைத்துப் பார்த்துச் சிரித்த உம்மை, இன்று உம் மகள் ரத்தம் சொட்டச் சொட்ட குற்றுயிராக நீ

என்று அழைக்கிறது. இது பிடிக்கவில்லை என்ரு சொல்கிறீர்? இல்லை! தலைவரே என்று கண்ணுக்கெதிரே சொல்கிருனே என்ற கோபம்! ஆணவம்!! ஒப்பாகும் மிக்காரும் இல்லை என்று ஓங்காரக் கூச்சலிடும் சூரைக்குடிச் சர்வாதிகாரியே, நிமிர்ந்துவிட்டான் மான்கொம்பு! இனி அயர்ந்துவிட அவன் ஈரல் செத்தவனல்ல! தேன்கூட்டைக் கலைத்துவிட்டு, ஏன் கொட்டுகிறது ஈ என்ரு கேட்கிறீர்?”

—கம்படி உச்சக்கட்டத்திற்கு வந்தது. புழுதி கிளம்பிற்று. வண்டி மாடுகள் மிரண்டு வெவ்வேறு திக்குகளுக்குப் பிய்த்துக்கொண்டன. வண்டி குடைசாய்ந்தது. வண்டிக்காரன் பயந்து ஓடிப் போய்விட்டான். ஆயுதம் தாங்கியோரும் நுழைய அஞ்சும் அடர்த்தியான காட்டில் சிற்றரசர்களைப்போல் கீர்த்தியோடும் கௌரவத்தோடும் வாழ்ந்து வந்தவர்களின் சிலம்புச்சண்டை எவருக்கும் தெரியாமல் நடந்தது. புலியும் சிங்கமும் கட்டிப் புரளுவதைப்போல் இருவரும் மானத்திற்காகப் போராடினுர்கள். அதிர்ச்சியுற்ற பறவைகள் கிளைகளிலேயே அசையாது இருந்தன. கொம்பிலே ஆட்டம்போட்டுக்கொண்டிருந்த குரங்கள் இமைமூடாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன.

இருள் மூடப்போகிற நேரம் வந்துவிட்டது. மேற்கே அழகர் மலைச்சரிவில் கதிரவன் படுத்துவிட்டான். ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாத மங்கலான பொழுது காட்டைக் கவ்விக்கொண்டிருந்தது. இரண்டு பெரிய தலைவர்களின் கம்புச்சண்டை அதுவரை நடந்துகொண்டிருந்தது. ஆனால் சிங்கப்பெருமாள் அம்பலகாரரின் கம்படியில் தெம்பு குறைந்திருந்தது. ஒரு அடிக்கும் மற்ருெரு அடிக்கும் இடையில் இடைவெளி

கணீர் என்று வீரநாதத்தைக் கிளப்பவேண்டிய ஒரே மரத்துக்கம்புகள் இன்று ஒன்றை ஒன்று முறித்துவிடத் துடிக்கின்றன. கள்ளர் சரித்திரத்தில் ஒரு கரும்புள்ளி வைத்துவிட்டீர். ஒரே ரத்தத்தில் இழையாடும் ஜீவ அணுக்கள் ஒன்றை ஒன்று வீழ்த்த நினைக்கும் முரன்பட்ட சரித்திரத்தை உண்டாக்கிய அநீதிக்கு இதோ அபராதம்!”—என்று கூவி பலமாகத் தாக்கினுன் மான்கொம்பு.

அம்பலகாரர் தடுமாறினுர். கரத்திலே இருந்த கம்பு நழுவி எட்டிப் போய் விழுந்தது. கண் இமைகள் முட்டித் திரும்புவதற்குள் மான் கொம்பு மறு அடியை பலம்கொண்ட மட்டும் ஓங்கி அடித்தான். அடிக்கும் போது அவனுக்கே மனம் குன்றியது. கண்களை மூடிக்கொண்டு தாக்கினுன். கையிலே எதுவுமே இல்லாத அம்பலகாரர் தனது இடது கையை நெற்றிக்குத் தூக்கி வைத்துக் கொண்டு அடியைத் தடுத்தார். அடி, ‘சடார்’ என்று விழுந்தது.

“செத்தேன்! செத்தேன்!” என்று கூவித் தரையில் சாய்ந்த அம்பலகாரர் இரண்டு மூன்று முறை தரையில் உருண்டு ஒரு புதருக்குள் போய் விழுந்தார். அந்தப் பரிதாபமான காட்சியை மான்கொம்பால் பார்க்க முடியவில்லை. முகத்தைச் சுழித்துக்கொண்டு வேறுபக்கமாகத் திரும்பிக்கொண்டான். அவன் கண்களில் நீர் தேங்கி நின்றது. சந்திரமதி—நாடகத்தில் அரிச்சந்திரன் சுடுகாட்டில் நிற்பதுபோல், நெற்றி மட்டக் கம்பைத் தரையில் ஊன்றி, தன்னுடைய முழு பலத்தையும் அந்தக் கம்பின்மேல் வைத்துக் கொண்டு சிலைபோல் நின்

கொம்பு.

“தருக்கள்

...விண்ட்சர் கோமகனுக்குச் சுமார் பதினெட்டு வருட...ம் மோட்டார் டிரைவராயிருந்த லார்ட் பரூச் என்...ன், திடீரென்று விலக்கப்பட்டான். மற்றவர்கள் ...னைச் சேர்த்துக்கொள்ளப் பயந்தனர். ஆகையால் ...ண்டனிலுள்ள ஒரு ஓட்டலின் வாசலில் நின்று கொண்டு அங்கு வரும் மோட்டார், குதிரை வண்டி இவற்றின் கதவுகளைத் திறந்து விடுவதும் போகும் போது அவற்றை மூடுவதுமான வேலையைச் செய்து கொண்டிருந்தான். சக்ரவர்த்திக்கே இவன் மோட்டார் டிரைவராக இருந்தான். கடைசியில் இவனுக்குச் சரியான வேலை கிடைக்கவில்லை.

வாலிப வனப்பும் இளமை மெருகும் பூண்ட ‘பாலா’, பார்க்கும் கண்களுக்கெல்லாம் இன்பப்புதையலாய் தோன்றினுள். அப்படி சுவைத்த கண்கள் பல சாடை காட்டின; பல சிமிட்டின! அவைகளிலேயெல்லாம் அவள் மயங்கினுளில்லை. ஆனால் ஆறுமுகத்தின் கண் சாயல்தான் அவளுடைய உடலிலே மின்சாரத்தைப் பாய்ச்சியது போன்ற இன்பம் கலந்த உணர்ச்சி தோன்றியது. கண்கள் கலந்தால் காரியம் கைகூட காலதாமதம் உண்டோ? ஒரே ஆலையிலே வேலை செய்பவர்கள், ஒரு மனம்ஆனுல் வாய்ப்புக்குத்தாஞ பஞ்சம்! சந்தித்தனர்...உரையாடினர்...உளம் கலந்தனர்...பின்...! கேட்கவேண்டுமா இன்பம் கொள்ளை! கொள்ளை!

சந்தித்து பிரியும்போதெல்லாம் ‘இதுதான் கடைசி முறையென்று’ கூறினுள். ஆனுல் அடுத்த நாள் அவளையும் அறியாமல்..! பாவம் பேதையாள்.. ...என் செய்வாள்! நிலைமை விபரீதமாகியது...அவள் கர்ப்பிணியானுள்.

இவர்கள் சந்திப்பால் பொருமை கொண்டவர்கள் இந்த நிலைமையை பஞ்சாட்சரத்தின் காதிலே போடத் துடிதுடித்தனர். முயற்சித்தனர். பஞ்சாட்சரம் வீடு திரும்பும்போது அவனை பார்க்காதவர்கள் போல் பாலாவின் நிலைமைக்காக பரிந்துபேசுவது போல் பாவனை செய்தார்கள். பஞ்சாட்சரத்தின் காதிலே சேதி எட்டிவிட்டது. நெருப்புப் பிழம்பை ஏந்தியவன் போல் துடித்தான். கோபம் கண்ணீர் கொட்டச் செய்தது. ஆயினும் அவன் நெஞ்சம் குளிரவில்லை. வேதனையோடு வீடு சென்ருன். சோகமே உருவெடுத்து தட்டுத் தடுமாறி வீடு வந்தவன்

காலைப்பிடித்து ... கண்ணீரால் கழுவினுள்.

“மானத்திற்காகப் போராடி வாழ்ந்தேன். ஆனுல் என் தங்கையாலேயே மானம் இழந்தேன். ஐயோ...” என்று கூறிக் கதறினுன் பஞ்சாட்சரம்.

பயத்தால் நடுங்கும் பாலாவின் கரங்கள் பஞ்சாட்சரத்தின் உடலையே குலுக்கியது. ஆத்திரப்படுவதா அன்றி அனுதாபப்படுவதா என்று புரியாது தனது நிலைமைக்கு தலையிலே அடித்துக்கொண்டு புரண்டான். பயத்தால் நடுங்கிய பாலா மெள்ள எழுந்து உள்ளே சென்ருள்.

விடிந்தால் வீதியிலே எப்படி நடப்பதென்று தெரியாதவனுய் வேல் தைத்த வேழம் போல் துடித்தான். அவன் இதயமே வெடித்திடுவது போல் வேதனையுற்ருன். கண்ணீர் ஊற்றுகள் வற்றவில்லை. நெடுநேரம் போராடினுன். புயல் ஓயவில்லை அவன் நெஞ்சில். பூகம்பம் நிற்கவில்லை! பொங்கிவரும் கடலதுபோல் கோபம் பொங்கிற்றென்ருலும் பாசம் அவன் கோபத்தை அனுதாபமாக மாற்றியது. மானமிழந்து வாழ முடியாதவனுய் துடித்த பஞ்சாட்சரம் இறுதியாய் துணிவுபெற்ருன். எழுந்தான். வீட்டுக் கூறையில் மாட்டினுன் கயிற்றை. ஆமாம் இறுதி முடிவிற்கே வந்துவிட்டான். சாகத் துணிந்துவிட்டான். சாகத்துணிந்துவிட்டான், மானத்தைப் பெரிதென மதித்த ஏழை! கவரிமான் பரம்பரை! கயிற்றிலே கழுத்தை மாட்டும் வேளை...அவனுக்கு ஒரு நினைவு வந்தது. பாலா திருமணத்திற்காக சேர்த்து வைத்த பணத்தை தோட்டத்து மரத்தடியில் மண்பாத்திரத்தில் போட்டு புதைத்து வைத்திருந்தான். தங்கைக்கும் தெரியாமல் புதைத்து

டை தூக்கப் பலம் பெற்றதும் நாலணு சம்பாதித்து அதில் பழகியதும் வண்டி இழுக்கும் உத்தியோகத்திற்கு உயர்த்தப்பட்டு ஒரு நாளைக்கு ஒன்னேகால் ரூபாய் சம்பாதித்து வருபவன். தன் சம்பாத்தியத்தைக் கொண்டே தன் தங்கை பாலாவைக் காப்பாற்றி வந்தான். இவன் இளமையிலேயே தந்தையைத்தான் இழந்தான். இவனது தாய் இவனையும் இவன் தங்கையையும் பெற்று வளர்த்த புண்ணியவதி-வறுமையின் கரத்தால் விரட்டப்பட்டு பலருக்கு வாலிப விருந்தாகவேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் துரத்தப்பட்டு இறுதியாக துணிந்து, குதிரை வண்டி ஓட்டும் ஒருவனுக்கு வைப்பாட்டியானதைச் சகியாது தாயை விட்டுப் பிரிந்து தனதருமை தங்கையோடு தனித்து வறுமையை எதிர்த்துப் போராடி வருபவன் இவன். தன் தாயால் தனக்குற்ற இழிச்சொல்லைத் துடைக்க மானத்தைப் பெரிதென்று மதித்து வாழ்ந்தான். அடிக்கடி தன் தங்கைக்கு மானத்தைப் பற்றியும், மாதர்க்கு அணிகலனும் கற்பைப்

அல்ல! அருவருக்கத்தக்க பிரதிபிம்பமும் அல்ல! வேண்டாமென்று வெறுத்துத் தள்ளவேண்டியவளோ, தீண்டத்தகாதது என்று தள்ளத் தக்கவளோ அல்ல! அவள் நிறத்தில் தங்கமும் அல்ல! தாரும் அல்ல! புளியம்பழம்! நிறம் எதுவாக இருந்தால்தான் என்ன?...வாலிப நீரோட்டம் போதாதா, பார்க்கும் கண்களுக்கு பரவசமூட்ட! இளமையின் வனப்புப் போதாதா இன்பக்கதைகள் சொல்ல! இன்பப் புதையல்போல் பொலிவு பெற்று விளங்கும் கண்களுக்கு காலதேவன் தந்திடும் காந்தசக்தி ஒன்று போதுமே இன்பபுரி காட்ட! பதினறு வயது நிரம்பிய பாவையர் உதடுகளிலே விளையாடும் மின்வெட்டு போன்ற இன்பத்துடிப்புகள்போதுமே களிப்பூட்டும் கற்பனைகளைத் தூண்ட! அசைந்தாடும் அங்கங்களிலே பட்டுத் தெறிக்கும் நயனக்காட்சிகள் போதுமே சயன அறை நினைவுகளைத் தூண்ட!

பாலா பருவத்தின் எழில்பூத்து விளங்க ஆரம்பமானது முதல் பஞ்

— 9-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 21—6—58 ‖ இதழ் 1

ஐந்தாம் ஆண்டு!

தென்றலுக்கு இது ஐந்தாம் ஆண்டு. நான்கு ஆண்டுகள் ஓடியாடிப் பணி புரிந்து ஐந்தாவதாண்டின் முகப்பில் வந்து நிற்கிறது தென்றல். பல வகைப்பட்ட தொல்லைகளுக்கிடையே தென்றல் ஆற்றியிருக்கும் பணியினை நினைத்து பூரிப்படைகிறோம். இந்தப் பூரிப்பு, எதிர்காலப் பணிக்கு உணர்ச்சியை—உறுதியை அள்ளித் தெளிக்கிறது.

தென்றல்-பத்திரிகை உலகில் ஒரு புதிய பாணியை உருவாக்கி, இலக்கியத் துறையில் புரட்சிகரமான விமர்சனங்கள் செய்து திராவிட வாலிபர்களிடத்திலே அழியாத அன்பினைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய பெருமையை இன்னொருவர் சொன்னதாக, வேறொருவர் வந்து நம்மிடம் தெரிவிக்கும்போது மனம் குளிர்கிறது. நம்மை நாமே எண்ணிப் பார்த்துக் கொள்கிறோம். சில வேளைகளில், நம்முடைய தொண்டா இவ்வளவும் என்று மலைத்துப் போகிறோம். இந்த வகையில் தென்றல் நமக்கு அரும்பெரும் சாதனைகளைச் செய்து கொடுத்திருக்கிறது.

கல்லூரி மாணவர்கள் தென்றலைப் புகழ்ந்து காவியம் பாடுகிறார்கள். ஆசிரியப் பெருமக்கள் வாயார வாழ்த்துகிறார்கள். மதவாதிகளும், இதிகாசங்களைத் தலையில் சுமந்துகொண்டு அலைவோரும் வெந்து சாகும்வண்ணம், தென்றல் தரும் விளக்கவுரைகளைப் பாராட்டி கழகத் தோழர்கள் கடிதங்கள் இவர்கள் [illegible]
பட்டு வ[illegible]

தமிழ் நாட்டில் எத்தனையோ கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். அவரவர்களுக்கு ஒவ்வொரு கொள்கை இருக்கிறது. கொள்கை இருக்கிறதே தவிர அந்தக் கொள்கை தமிழ்நாட்டுக்கு ஏற்ற கொள்கையாக - தமிழ்நாட்டு மக்கள் பின்பற்றக் கூடிய கொள்கையாக இல்லை,

காங்கிரஸ் கட்சிக்காரர்களானாலும் சரி, கம்யூனிஸ்டுகளானாலும் சரி, சோஷலிஸ்ட்களானாலும் சரி-எல்லோருமே மேடை அமைத்துப் பேசுகிறார்கள். ஆங்கிலத்திலே பேசுகிறார்களா, அல்லது இந்தியிலே பேசுகிறார்களா? எல்லோருமே தமிழிலே தான் பேசுகிறார்கள். தமிழ் மொழியினாலேதான் அவரவர்கள் கொள்கைகளை-திட்டங்களை சாதனைகளை விளக்கிக்கொண்டு வருகிறார்கள். தமிழ் தாய்மொழியாயிற்றே, தமிழ்நாட்டிலே தமிழ் மொழியைக் கொண்டு தானே கட்சியை வளர்க்கிறோம் என்று அவர்கள் யாராவது நினைத்துப் பார்க்கிறார்களா? இல்லை. அவர்கள் செய்யமாட்டார்கள். ஏன் செய்யமாட்டார்கள்? அவர்களுடைய தலைவர்கள் தமிழர்கள் அல்ல. எல்லாம் வடநாட்டுக்காரர்கள். ஆனால் நாம் அப்படி பேச முடிகிறது. ஜாதிப் பாகுபாடே பண்டைத் தமிழகத்தில் இருந்ததில்லை என்பதை அறிய தமிழ்ப் படித்தால்தான் புரிந்து கொள்ளமுடியும். நாம் தமிழர்கள்—திராவிட நாட்டிலே பிறந்தவர்கள்; அதனால்தான் எது எது ஆரியக் கோட்பாடு என்று நம்மால்தெரிந்துகொள்ளமுடிகிறது.

உதாரணத்திற்காக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். வெள்ளைக்காரன் ஆங்கில மொழிக்கு அகராதி எழுதினான். அவனுடைய நாட்டைப் பொறுத்த வரையில் அந்த அகராதி சிறப்பானது தான். அவன் இந்தியாவைக் கைப்பற்றினான். தமிழ்நாட்டில் வாழ்ந்தான். அப்போது அவன் தமிழ்நாட்டில் வெண்டைக்கா[illegible]யைப் பார்த்தான். முருங்கக்காயைப் பார்த்தான். வெண்டைக்காயும் முருங்கக்காயு[illegible] இங்கிலாந்து நாட்டில் இல்லை[illegible] அதனால் அவர்களுடைய அ[illegible]ராதியில் அவைகளுக்கு உரி[illegible] வார்த்தைகள் இடம்பெறவில்லை[illegible] தமிழ்நாட்டில் பார்த்த வெண்டைக்காய்க்கும், முருங்கக்காய்க்கும் ஆங்கிலத்திலே வார்த்தைகளைக் கண்டுபிடிக்க விரும்பினான்.

வெண்டைக்காய், பெண்களின் விரலைப்போல் மென்மையா[illegible]

வெள்ளைக்காரனும் வெண்டைக்காயும்

ஆனாலும் ஆள பழய ஆள்தான்! எனக்குத் தெரிகின்றது. இந்த உண்மை. ஒருவேளை வேலய்யனுக்குத் தெரியுமோ என்னமோ அப்படியேதான் தெரிந்து மட்டும் என்ன. ஞானசம்பந்தன் தான் தன்னுடைய தந்தை என்பது எப்படி அவனுக்குத் தெரியும். அதை நானல்லவா சொல்லவேண்டும்.

ஞானசம்பந்தனுக்கு இந்த உண்மை தெரியாததினால் என்னென்ன நடக்கின்றன! நினைத்தாலே வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் உண்மை தெரிந்தவர்களுக்குவேதனையாக இருக்கும்.

வேலய்யன்தான் ஞானசம்பந்தனின் மகன். அமுதவல்லி அளித்துச்சென்ற அருமைமகன். பொன்னப்பன் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்த பொன் சித்திரம். ஆனால் இன்று அந்தப் பொன்னப்பன் வேலய்யன் ஆகிவிட்டான். வேறு யாரோ ஒருவன் பொன்னப்பன் ஆகிவிட்டான். ஆகிவிட்டானாவது - நான் ஆக்கினேன்.

ஞானசம்பந்தன் தன் மகனைத் தான் இத்தனை யாண்டு காலமாக வளாத்துவந்தான். ஆனால் தன் மகன், தன் சொநத உதிரத்தின் கூறு என்பது தெரியாமல் யாரோ அயலவன் என்று நினைத்து அன்பைப் பொழிந்தான். இன்று அயலவனாக இருக்கின்றவனைத் தன் மகன் என நம்பி அவனிடம் தன் மனத்தை இழக்கின்றான்·என்னவேடிக்கை இது!

நான் [illegible]
என்ன எண்ண[illegible]? நாம் பிரித்தாலும் அப்பனும் மகனும் சேர்ந்துவிட்டனர் என்று உள்ளுக்குள்ளே எனக்கு மகிழ்ச்சி கூட இருந்தது. ஆனால் ஞானசம்பந்தன் வேலய்யனைக் காணவும் கூசியவனைப்போல முகத்தைச் சுளித்தான்; கையை உதறினான். 'போ. பிறகு வந்து சொல்' என்றான். வாடிய முகத்தினனாய் வேலய்யன் வந்த வழியே திரும்பினான்.

அப்போது ஓடிச் சென்று அவன் கையைப் பிடித்து இழுத்து வந்து ஞானசம்பந்தன் முன்னே நிற்க வைத்து "மடையனே உன் மகன் இவன் தானடா" என்று உண்மையைக் கக்கிவிடலாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் அப்படிச் செய்திருந்தால் என்ன ஆகியிருக்கும், என்னுடைய நிலைமை? இத்தனை நாட்கள் ஞானசம்பந்தனை ஏமாற்றிய ஆத்திரம் எழுந்துவிட்டால் என்ன செய்வானோ? ஏதும் செய்யவில்லை என்றே வைத்துக்கொள்வோம். இப்போது பொன்னனாக இருப்பவன் என்னஆவது? எங்கோ இருந்த அவனை எடுத்து வந்து பொன்னன் ஆக்கினேன். இன்று எனக்கு உண்மையான பொன்னன் கிடைத்துவிட்டான் நீ போ என்றால் போய்விடுவானா?

வேலய்யன் மீது இருக்கும் பாசம் மெல்ல மெல்ல பொன்னனிடம் வருகின்றது. கண் எதிரே இதனைக் கண்டும் ஏதும் செய்ய

[illegible]
[illegible]கு ஒருவகையில் நல்லது தான்.

இனி எதைப்பற்றியும் வீண் கவலைப்பட்டு என்ன பயன். துன்பம் வருவதற்கு முன்னமே ஏன் துயரப்பட வேண்டும்! வந்தபின் துணிவு இருந்தால் எதிர்ப்பேன்.

ஞானசம்பந்தன்

நான்கூடஅப்படித்தான்நினைத்தேன். வரும்போது பார்த்துக்கொள்ளலாம்; இப்போது என்ன அதைப்பற்றிக் கவலை என்று வாளா இருந்தேன். என் கண்களுக்கு மட்டும் அந்தக் காட்சி படாதா என்ன பெரிய பட்டணமாக இருந்தால் படாது. கடல்போன்ற மக்கள்; அதிலே திவலைபோல் சிறு நிகழ்ச்சிகள் மறைந்துபோகும். ஆனால் கிராமத்தில் இருக்கும் மக்கள் தொகையே குவளைநீர் அளவு தானே இதிலே ஒரு திவலை ஆடினாலும் தெரியும், அசைந்தாலும் தெரியும்.

அந்தக் கோடிவீட்டு நல்லான் தங்கை சொக்கி இந்தப் பயல் வேலய்யன்மீது ஒரு கண் போட்டு விட்டாள் என்பதை நான் பார்த்துவிட்டேன். எனக்குத்தான் இந்தத் துறையிலே நிரம்பப் பழக்கமாயிற்றே, இதைக் கூடவா தெரிந்து கொள்ளமாட்டேன்! இவன் அவளைப் பார்ப்பதும், அவள் இவனைக் கீழ்க்கண்ணால்வெட்டுவதும் அடேயப்பா. உம் இளவயது அப்படித்தான் என்று

[illegible]தன.

நான் ம[illegible]
என்று நினை[illegible]
நாள் ஏரிக்க[illegible]
னிடம் பே[illegible]
போது அவனும்[illegible]
ததுபோல் இருந்[illegible]
கொண்டேன்.

எனக்கு நிரம்ப[illegible]
யாரோ ஆனாலும் நா[illegible]
ஆளாக்கிவிட்டவன்[illegible]
அவன் மனம் மகிழ[illegible]
இருந்தேன்.

ஆனால் என் பொ[illegible]
வந்தபின் எல்லாம் மாறி[illegible]
டதே! பொன்னன் என் ம[illegible]
ஆமாம் என் உதிரம் அவன்[illegible]

அவன் சென்னையை வி[illegible]
மாத்தூருக்கு வந்தான். என்[illegible]
ஒருநாள் சொக்கியைக் க[illegible]
டான். பயல் சொக்கிப் போ[illegible]
விட்டான் போலிருக்கிறது. த[illegible]
தான், ஒருவன் இச்சைகொண்[illegible]
டவள்மீது இவன் பார்வை படு[illegible]
வது தப்புதான்.

ஆனால் அவன் என் மக[illegible]
ஆயிற்றே — வேலய்யன் யாரோ
தானே!

அந்த யாரோ இந்த என் மகனுடன் போட்டிக்கு வருவதா? அதை எப்படி நான் தாங்குவேன்.

என்னிடம் இதைத்தான் சொல்ல வந்தான் என்பது எனக்குத் தெரியும். என்னமோ எனக்குத் தெரியாததைச் சொல்ல வருபவன்போல வந்தான். அதைக் காது கொடுத்துக் கேட்

மானம் காத்த மங்கை

ப. உ. சண்முகம், எம். எல். ஏ.

பஞ்சாலையில் வேலை செய்யும் 'பாலா' பஞ்சாட்சரத்தின் தங்கை. அவளின் அண்ணனே கைவண்டி தள்ளி காலந்தள்ளும் பாட்டாளி. ஏழ்மையின் தொட்டிலிலே நெளியும் இவர்கள் குடும்பத்தில் வேறெவரும் இல்லை. அண்ணனும் தங்கையும் தங்கள் உடல்களை வளைத்து உழைத்து வறுமையை விரட்டப் போராடி வந்தார்கள். இல்லாமையின் கரத்தினின்றும் விடுபட போராடி வந்த இவர்கள் வாழ்க்கையிலே புயல் நுழையவில்லை என்றாலும் தென்றல் புகவில்லை. பசிபோக்கும் அளவிற்கு பாடுபடும் பலம் பெற்ற இவர்கள் வாழ்க்கையின் ருசியை சுவைத்ததில்லை. ஆம்...இருவருமே மணமாகாதவர்கள். என்றாலும் மானத்தோடு வாழவேண்டுமென்ற கொள்கை உடையவர்கள். இழிச்சொல்லுக்கோ அன்றி பழிச் சொல்லுக்கோ இடம் இல்லாதவாறு வாழ்வதிலே விருப்பம் உள்ளவர்கள். மானம், கண்ணாடிப் பாத்திரம் போன்றது. கண்ணாடிப் பாத்திரத்தைக் கைநழுவ விட்டுவிட்டு பின்னாடி வருந்திப் பயனில்லை என்பதை உணர்ந்தவர்கள் இவர்கள்.

பஞ்சாட்சரம் பாடசாலைப் பக்கம் போகாதவனல்ல. அவன் ஆரம்ப பாடசாலையின் மாஜி மாணவன். வறுமை குறுக்கிட்டு அவன் வாழ்வையே மாற்றி அமைத்து விட்டது. கைவண்டி தள்ளி தினம் காலணா வாங்க ஆரம்பித்த அவன் பின் மூட்பற்றியும் தனக்குத் தெரிந்த கதைகளைச் சொல்லி புரியவைத்து வந்தான். தன் தங்கையை நல்லவனுக்கு மணம்செய்து வைத்தபின் தான், தான் மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்றிருந்தான்.

பாலா...கண்ணைக்கவரும் வண்ண மலர் அல்ல அவள். பருவத்தின் கரத்தால் அழகுபெற்று பசுமையோடு விளங்கும் அவள் தங்கத்தையோ அன்றி தந்தத்தையோ பழிக்கும் பதுமையும் அல்ல. கண்டாரைக் கலங்கச் செய்யும் கலைக் கோயிலும் அல்ல. அழகுக் கலைக்கு இலக்கணமும் அல்ல. பழகிப் பருகுவோம் இன்பத்தை என்ற எண்ணத்தை எழுப்பும் காதற் தூண்டுகோலும் அல்ல!...ஆனால் அவள் அவலட்சணத்தின் பிரதிநிதியும்

சாட்சரம் கவலைக்கொண்டோனாய் திரிந்தான். மைத்துனனைத் தேடித் திரிவதிலே அக்கரை கொண்டவனாய் அலைந்தான். மணக்க முன்வந்தவர்கள் இவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. இவன் மனதிற்குப் பிடித்தவர்கள் மணக்க முன் வரவில்லை. தேடி அலைவதிலேயே நாளை ஓட்டினான். காலதேவன் தன் கரத்தால் இளமைக்கு அழகு பூட்டுவதோடா நின்றுவிடுகின்றான், இதயத்திலும் அல்லவோ இன்ப நினைவுகளை ஊற்றெடுக்கச் செய்கின்றான். மூங்கிலைத் தழுவி நிற்கும் பூங்கொடி, ரீங்காரம் பாடி வன்னமலர் தேடும் வண்டு... சுருண்டு சுருண்டு ஓடிவந்து கரையை முத்தமிட்டுச் செல்லும் கடல் அலைகள்—இதுபோன்ற இயற்கைக் காட்சிகளைக் காணும் இளைஞர் கண்கள், களிப்பூட்டும் கற்பனைகளை தூண்டாதா? உபதேசத் திரையை கிழிக்க இந்த ஆயுதம் போதுமே. நடமாடும் தென்றலிலே நடனமாடும் பூஞ்செடிபோல் உவகையூட்டும்காட்சிகளாலே 'பாலா'வின்நெஞ்சமும்ஊஞ்சலாடியது. உட்கார்ந்து தன் அண்ண[...]



பாலாவை ஏறெடுத்தும் பாராது படுக்கையை விரித்துப் படுத்தான். வழக்கமாக வேடிக்கைக் காட்டி வெடிச் சிரிப்புக் கிளப்பும் அண்ணன் மௌனமாய் படுப்பது கண்ட பாலா திடுக்குற்றாள். பயத்தால் வழிந்த வியர்வை அவள் உடலையே நனைத்தது. மெள்ள, தைரியம் கொண்டவளாய் தன் அண்ணனை நெருங்கி "அண்ணா...அண்ணா!" என்றழைத்தாள். சிறிதுநேரத்திற்கெல்லாம் படுத்திருந்த பஞ்சாட்சரம் தேம்பித்தேம்பி அழக் கண்டாள். நிலமையை ஒருவாறு புரிந்துகொண்ட 'பாலா'வும் கதறி அழ ஆரம்பித்தாள். மெள்ள

பெரிய இடத்து வேலைக்காரன்!

வேலையனை ... வேண்டியது ... யோசித்துப் ... வேறு வழியே

...வறு வழியேதான் ...வெளியேறிவிடலாம்' ... சொக்கி சொல் ...க்கிக்கு என்ன சுளு ... சொல்லிவிடுகின்றாள். ...யறுவது என்றால் அது அத்தனை எளிதில் இய ... என்ன! எங்கோ இருந்து ...படியோ வந்தேன் என்றாலும் ...த்தனை நாள் இங்கு பெற்ற ...ருமையும், அடைந்த இன்பத்தயும், வளர்த்த அன்பையும் விட்டுவிட்டு எப்படிப் போவது? எங்குதான் போவது?

அவளுக்கு என்ன ஊர் தெரிமா, உலகம் தெரியுமா? வீடு தரியும், வீட்டுக்குப் பெரியவ அண்ணன் நல்லான் தெரி

...றெட்டு வருட...விட்டது. நாட்டிலே நலிவு இருக்கிறது எனத்தான் சொல்ல, மன்னன் புதிய வரிகளுக்கு வழி கேட்கிறானே எனத் திகைத்தான். இதற்கு ஒரு வழி காண வேண்டும் என்று முடிவு செய்தவனாய் "மன்னவா நாளை சொல்லுங்கள்" என்று கூறிவிட்டுப் போனான்.

அன்றிரவு ஆட்களை விட்டுத் தைலம் தேய்க்கும் திம்மப்பன் வீட்டைச் சோதனையிடச் செய்தான். ஆட்கள் எலுமிச்சை அளவு பொன்னுடன் திரும்பினர்.

அடுத்த நாள் அமைச்சர் அரசனைக் கண்டு நாட்டு நிலை என்ன என்று கேட்க வாய் எடுத்தார். அதற்குள் மன்னனே முன் வந்து நாடு நிரம்ப நலிந்திருக்கிறதென அறிகின்றேன் அமைச்சரே இல்லாமை மிகுந்திருக்கவேதான் கள்வர் மிகுந்திருக்கின்றனர். தைலம் தேய்க்கும் திம்மப்பன்கூட சொன்னான்" என்றார்.

அதற்குப்பின் அமைச்சர் அரசனுக்கு உண்மையை உணர்த்தினார் என்று கதை கேட்டிருக்கின்றேன். தன் மனத்தில் இருப்பது தான் உலகத்திலும் நிலைமை என்று மனித மனம் நினைக்கின்றது. நன்மையானாலும் சரி, தீமையானாலும் சரி இதுதான் உலகத்து இயற்கை போலும்;

சொக்கிமட்டும் இதற்கு விலக்கா என்ன? அவளும் அப்படித்தான் நினைக்கின்றாள்.

...யா... வாலிப வ... அமைதி ...மெதுவும் ஆர்வத்தை எழுப்பினார். அவர் சொன்னாரே பழந் தமிழர் காலத்திலே காதலர்க்குப் பெற்றோர் தடை விதிக்கும்போது அவர்கள் பிறிதோர் இடம் சென்று வாழுவர் என்று, அதைக் கேட்டுவிட்டு இந்த பேதைப்பெண் சொன்னாளோ என்னவோ! எப்படியானாலும் இன்னுஞ் சில நாட்களாவது இங்கே இருக்கத்தான் வேண்டும் என்று சொன்னேன். 'சரி' என்று ஒப்புக்கொள்ளும்முன்னே அவள் முகத்தில் படர்ந்த உணர்ச்சிகளை நான் எப்படி எடுத்துச் சொல்வேன்.

இந்தப் புதியவன்-பொன்னன் தொல்லை வர வர வளர்கின்றதே தவிர குறைகின்ற வழியாகக் காணோம். சொக்கியிடம் தன் கை வரிசையைக் காட்டிட முயன்றவன் அது பலிக்காததைத உணர்ந்துகொண்டதும் இப்போது பார்வையை என் பக்கம் திருப்பியிருக்கின்றான்.

நான் ஒருவன் இருப்பதால் தானே சொக்கி என்மீது நேசம் வைத்திருக்கின்றாள்- நான் தொலைந்துவிட்டால் அவள் தொடர்பு கிடைத்துவிடும் எனக் கருதுகின்றானோ என்னவோ தெரியவில்லை.

முல்லைக் கொடியாக இருந்தால் அவன் நினைப்பது சரிதான் இந்தப் பக்கம் படர்ந்திருக்கும் மூங்கில் கொம்பிலிருந்துஎடுத்து அந்தப் பக்கம் முருங்கை மரத்தின்மீது ஏற்றிவிட்டாலும் முல்லைக் கொடிபற்றிப் படர்ந்து

'என்ன செய்தி' என்று கேட்கத் துடித்தன என் வாயும் கையும் ஆனால் பத்து ஆட்கள் வேற்றாட்கள் பார்த்திருக்கும்போது இந்த நாடகம் நடப்பானேன் என்று சும்மா இருந்துவிட்டேன். இனி ஒரு வாய்ப்பு அப்படி வாராதா பார்ப்போம். இனி ஞானசம்பந்தர் கேட்பார், குறை களைவார் என்று எதிர்பார்த்துப் பயன் இல்லை. அவர் என்னை மறந்தே போய்விட்டார். இல்லை—நான் அவரைத் துறந்து விட்டால் நல்லது என்று நினைக்கின்றார். இனி நானேதான் ஒரு வழி பார்த்தாக வேண்டும். என்ன வழி, என் வழியே நான் போக வேண்டியதுதான். அந்த வழிக்குத் துணையாக சொக்கி வருகின்றேன் என்கிறாள். முன்னே திருப்பெரும்புதூரிலேயிருந்து புறப்படும்போது தனி ஆளாக வந்தேன். இன்று மாத்தூர் மண்ணை விட்டுப் போகலாம் என நினைந்திடும்போது வழித்துணையாக மட்டும் அல்லாமல் வாழ்க்கைத் துணையாகவும் வருவதற்குச் சொக்கி வாய்த்திருக்கின்றாள். இது எனக்கு நல்லதுதான் என்றாலும் வாழ வழி வேண்டுமே என்ற திகில்தான் என் அடிவயிற்றில் அள்ளிக் கொட்டிய நெருப்பு போல் வேதனையைத் தருகின்றது.

தொடரும்

விரைவில்!

இவர்தான் எம். ஜி. ஆர்!

ராஜம்-மணாளன் எழுதுகிறார்.

-28-

அருணாசலம்

நான்தான் நன்ருகப் பார்த்தேனே. ஒருமுறைக்கு இருமுறை நன்ருகத் துடைத்துப் பார்த்தேன். 'அழுக்கு அல்ல அது மச்சம்' என்று அவனே சொன்னுனே இன்னுமா ஐயம். நிச்சயமாக அவன்தான் என்பதைத் தெரிந்துகொண்டதும் நான் வியப்பில் ஆழ்ந்தேன். வியப்பில் மட்டுமா. என்ன வேடிக்கை இது எனத் திகைத்தேன்.

வேலய்யன்-புதிய பெயர்தான்.

உண்மை கண் எதிரில் இருக்கும்போது பொய் என்று நினைக்கின்ருேம். பொய் புனைந்து வந்து நின்ருல் உண்மை இது என உரக்கக் கூவியழைக்கின்ருேம். இதிலேதான் உலகத்தின் மகிழ்ச்சி இருக்கிறதோ என்னவோ!

நேற்று எனக்கே பரிதாபமாக இருந்தது. ஏதோ சொல்ல வேண்டும் என நினைத்து பொன்னன்—இதென்ன தொல்லை, அந்தப் பழைய பெயரை நான் இன்னும் மறக்காமல் இருக்கிறேனே—; வேலய்யன் ஞானசம்பந்தனை நெருங்கினுன். தோட்டத்துக் கிணற்றடியில் நின்று ... அதைக் கண்டபோது ...ரினேன் ...

வழி தெரியாமல் திகைக்கின்றேன் நான்.

ஒருவேளை அமுதவல்லி உயிரோடு இருந்திருந்தால் இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்காது. தன் மகன் காணுமல் போன அன்றே கதறி அழுதிருப்பாள். அவள் அழுத அழுகை சென்னையின் பேரிரைச்சலை அடக்கிக்கொண்டு மாத்தூர் மண்ணில் கிடந்த ஞானசம்பந்தன் காதுகளை எட்டிப் பிடித்திருக்கும். யாரோ ஒருவனை நான் பலாப்பழம் கொடுத்துப் பொன்னன் ஆக்கி இருந்தால் அது பலன் அளித்திருக்காது.

அவள் மாண்டு ...



கண்டும் காணுததுபோல

...ணககாலை ஆ... இவர்களது மூலதனம் ப... பட்டு வந்திருக்கிறது. பிற நாடுகளிலும் இவர்கள் கணக்குகளைத் தமிழிலேயே எழுதுவார்கள். அதிலும் தமிழ் எண்களையே பயன்படுத்தியிருக்கிருர்கள். இன்று வழக்கழிந்து போன தமிழ் எண்களைச் செட்டிநாட்டில் தான் காணலாம்.

செட்டிநாட்டில் திருமணங்களில் **இசைகுடிமானம்** என்று ஒன்று எழுதுவார்கள். அதையும் ஏட்டில், எழுத்தாணி கொண்டு தான் எழுதுவார்கள். பலர் கொடுக்கும பணங்களை அதில் வரவு வைப்பார்கள். அந்தப் பணம் எதிர்காலத்தில் மணமக்களின் இசை, (புகழ்), குடி, மானம் முதலியவற்றைக் காப்பதற்காகப் பயன்படட்டும் என்ற கருத்தாக இருக்கலாம். தாலி கட்டுவதைத் திருப்பூட்டுதல் என்று அழைப்பார்கள். பூமணமிடுதல், பால்குடித்தல், பெண் அழைத்தல், பெண்ணெடுக்கிக் காட்டுதல், குதிரை ஏறி ஊர் வலம் வருதல், வேவு இறக்குதல், காப்புக் கட்டுதல் முதலிய அப்பழுக்கற்ற தமிழ்ப் பழக்கங்கள் இன்றுவரை அங்கே கையாளப்பட்டு வருகின்றன. அகநானூற்றில் காணப்படும் திருமணப் பண்புகளை இன்றும் செட்டிநாட்டில்தான் காணலாம். நன்ருக வாழ்ந்து வளம் பெருக்கும் முதிய தாய்மார்கள், பெண்ணை வாழ்த்தும் முறை அகநானூற்றில் உள்ளது போலவே செட்டிநாட்டில் காணப்படுகிறது. பெண்ணுக்கு தாய்வீட்டினர் கொடுக்கும சீதனச் சொத்துக்கள் பெண்ணின்

தயமுக... மறவர் மக்களுக்கு இவர்கள் வழங்கும் மரியாதைகள் பலப்பல.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் கலப்பற்ற தமிழ்முறைகள், செட்டிநாட்டிலும் காணப்படுகின்றன. கல்வியறிவில்லாத பெண்கள்கூட கற்பனையோடு பாடும் திறனை இந்த இரண்டு இடங்களிலும் காணலாம். தொட்டிலுக்கு முன்னுலும், இழவு வீடுகளிலும் செட்டி நாட்டுப் பெண்களின் கற்பனை அற்புதமான வடிவம் பிடிக்கும். அப்பொழுதே இட்டுக்கட்டிப் பாடுவார்கள். பிற பெண்களின் ஒப்பாரிகளையும், தாலாட்டுக்களையும் பற்றி விமர்சனம் செய்வார்கள். திருநெல்வேலி சைவப் பெண்களைப்போலவே காதுகளை நீளமாக வளர்க்கும் முறை இன்றுவரை இவர்களிடம் காணப்படுகிறது. பழநாட்களில் ஏராளமான கப்பல்களுக்கு இவர்கள் உரிமைக்காரர்களாக இருந்திருக்கிருர்கள் என்பதை இன்று வழக்கில் காணப்படும் சில சொற்களால் அறியலாம். கவலையோடுகாணப்படுபவனைக் 'கப்பல் கவிழ்ந்து போச்சா?' என்று கேட்பார்கள். கோவலன்-கண்ணகி பற்றிய தெருக்கூத்துகள் பன்னிரண்டு கப்பல்களில் கோவலனுக்குப் பொன் நாணயங்கள் வந்த செய்தியைச் சொல்லுகின்றன. கோவலனும் கண்ணகியும் இவர்கள் வழியினரே என்பதற்குப் பல சான்றுகளைக் காணலாம். கண்ணகி அம்மை என்ற பெயரை கண்

பிற்... பட்டு வந்த இவர்கள் தமிழின் செழிப்பிற்கும் இன்று பயன்பட்டு வருகிருர்கள். செட்டி நாட்டில் வழங்கும் தமிழ் பற்றி தோழர் "சோமலெ" அவர்கள் எழுதியுள்ள ஒரு சிறு பகுதியோடு, இந்தக் கட்டுரையை முடிப்போம்:

"செட்டிநாடு, தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும்தமிழ்மொழிக்கு ஆக்கந் தந்தும் வருவதைத் தமிழகம் நன்கு அறியும். ஆனுல், செட்டிநாட்டில் வழங்கும் தமிழைத் தமிழகம் நன்கு அறியும் என்று சொல்லுவதற்கில்லை. செட்டிநாட்டுத் தமிழை, இருகூருகப் பிரிக்கலாம். ஒன்று, பெரும்பாலும் பெண் மக்கள் பேசுவது. மற்ருென்று ஆண் மக்கள் பயன்படுத்துவது. முன்னதில் அருமையான இலக்கியச் சொற்கள் மருவியும் மாறியும், சிதைந்தும் திரிந்தும் வழங்கி வருகின்றன. பின்னதில் திரைகடலோடித் திரவியம் தேடிய ஆண் மக்கள் தாங்கள் சென்ற நாடுகளில் வழங்கும் மொழிகளிலிருந்து சில சொற்களைக் கொண்டு வந்து தமிழில் கலந்திருப்பதைக் காணலாம்.

"பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" என்று தேவாரத்தில் ஆளப் பெற்றுள்ள "பைய" என்னுஞ் சொல் செட்டிநாட்டில் நாள் தோறும் வழங்கி வருகிறது. "மெல்ல", "மெதுவாக" என்பது இதன் பொருள்.

"பந்தல்" என்னுஞ் சொல்,

தான்" என்ருே ...சொல்லுவது பிழையாகும். படர்க்கைக்குக் கொடுத்தல் என்றும், தன்மை நிலையில் தருதல் என்றும் சொல்லவேண்டுமென்பது இலக்கண வரம்பு. இலக்கண வாசனையில்லாத ஆச்சிமாருங்கூட, தமக்குள் பேசிக்கொள்ளும்பொழுது, மரபு பிறழாமல் பேசுவர். இதை, ஒரு மணி நேரம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் அடைந்த வியப்புக்கு எல்லையில்லை.

செட்டி நாட்டு மக்கள் திட்டும் போதுகூட 'படவா', 'பட்டுக் கிடப்பான்', 'மொட்டையாகப் போக' 'குழியிலே போக' என்று தூய தமிழில் திட்டுவர். சிறுவர் குறும்பு செய்யும்போது, அவர்களைக் கோபிப்பதற்கு "அரசளுவான்" (அரசாளுவான்-அரசு-ஆளுவான்) என்று கூறி வாழ்த்துவர். "பாவி பரப்பான் பறந்திறந்து போவான்" என வசை பாடுவர்.

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்"

என்னும் குறளிலும் இச்சொல் ஆளப் பெற்றிருக்கிறது.

கூட்டத்தைக் கலைக்கலாம்என்பதற்குக் கூட்டத்தைப் "பெருக்கலாம்" என்றும, விளக்கை அணை என்று சொல்லுவதற்கு

— 11-ம் பக்கம் —

ல் பிறகு ஏதாவது வாயைத் ந்து சொல்ல வேண்டும், ந்த வம்பு எதற்கு என்றுதான் ற்றியைச் சுளித்தேன். கையை தறினேன். போ போ என் ன்.

அவன் மனம் என்ன பாடுபட் தோ. என்ன இருந்தாலும் நீ ளர்த்தவன் ஆயிற்றே என்று ன் மனம் இடித்துக் கேட்டது.

எவ்வளவு ஆசையாக வளர்த் ன் அவனை நான்?

புலிக்கோடு ஆட்டத்தின் நடு ் கண்டு எடுத்தேன். அவனை உள்ளத்தின் நடுவில் வைத் போற்றினேன். அவன் எது ட்டு இல்லை என்றேன். ஏற் தந்தான் வளர்த்தேன். தெல்லாம் சரி.

ஆனால் இன்று என் மகன் துவிட்டானே. இனியும் எப் நான் இவனையே தூக்கி த்துக்கொள்வது.

வெளுப்பாரிடமிருந்து துணி ம்வரையில் மேலும் மேலும் க்கு ஏறிய துணி என்று வேறு வழியில்லாமல் உதறி றியாவது உடுத்துகின்றோம். ளுப்பார், வெள்ளை வெளேர் று வெளுத்த துணியைக் ண்டு வந்த பின்னும் அழுக் யே அணிந்து செல்ல வேண் என்பது நியாயமாகுமா ன?

துணிக்கே இந்த நீதி என்றால் ந்த மகனுக்கு என்ன நீதி ச் சொல்வது?

யும். அவன் கொட்டுகின்ற அன்பைப் பார்த்துவிட்டு 'உல கம் இப்படித்தான் அன்பு மய மானது' என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாள்.

அன்றைக்கு அந்த ஆசிரியர் சொன்னாரே தைலம் தேய்க்கும் திம்மப்பன் கதை அதைப்போல் இவள் நிலை.

தைலம் தேய்க்கும் திம்மப்பன் நாள்தோறும் அரசனுக்குத் தைலம் தேய்த்துவிடும் வேலை யில் இருந்தானாம். தைலம் தேய்த்து விடும்போது மன்னன் ஊர்ச் செய்தியையும், மக்களைப் பற்றியும் அவனிடம் ஏதாவது பேச்சுக் கொடுத்து அறிந்து கொள்வது வழக்கம்.

ஒரு நாள் அப்படி, திம்மப் பனைப் பார்த்து "மக்கள் எல் லோரும் எப்படி இருக்கிறார் கள்?" என்று கேட்டார்.

உடனே திம்மப்பன் "அதற் கென்ன அரசே, உங்கள் ஆட்சி யில் எல்லோரும் நல்லபடியாகத் தான் இருக்கிறார்கள். எவ்வளவு ஏழையானாலும் எப்பாடுபட்டோ எலுமிச்சை அளவு பொன் சேர்த்து வைத்திருக்கிறார்கள்" என்றானாம்.

மன்னனுக்கு இதைக் கேட்ட தும் மகிழ்ச்சி மிகுந்தது. தன் அமைச்சரிடம் இந்தச் சேதியைச் சொல்லி 'புதிய வரிகளைப் போட லாம் அல்லவா?' என்று கேட் டார்.

அமைச்சருக்கு அதைக் கேட் ...ப்பாகப் போய்

வெளியேறிவிடலாம் என்று வாய்க்குச் சுளுவாகச் சொல்லி விடுகின்றாள்.

எங்கே போவது? என்ன செய்வது? பசி எடுக்கும்போது புசி என்று ஒரு பிடி கொடுக்க யார் இருக்கின்றார்கள். இந்தப் பரந்த உலகத்தில் இருவருக்கு இருக்க இடம் இருக்காதா என்று அந்தக் கிணற்றுத் தவளை கேட்கின்றாள். இந்த இரண்டு பேராகமட்டும் இருந்தால் எப் படியோ வயிற்றைக் கழுவிக் கொள்ளலாம். ஆனால் இதைப் போல எத்தனையோ இரண்டு பேர் இருக்கின்றார்களே என்ன செய்வது?

ஒருவேளை இது பழந் தமிழர் காலமா என்ன-காதலர் வந்த னர் அவர்க்கு ஆதரவு அளிப் போம் எனச் சான்றோர் சேர்ந்து வாழ வைக்க முன்னேயெல் லாம் அப்படித்தான் செய்வார் களாம். அன்றைக்கு ஊரிலே ஏதோ ஒரு கூட்டம் நடைபெற் றது. அதிலே விறுவிறுப்புடன் ஒருவர் பேசினார். அவர் தமிழர் களே, உங்கள் முன்னோர் வாழ்வு நீங்கள் வாழ வேண் டாமா? இன்றிருக்கும் இழிநிலை துடைத்து இன்பம் காணவேண் டாமா? தமிழ்நாடு முன்னே இருந்த தன்னேரிலா தகைமை சமுதாயத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும்சரி, பொரு ளாதாரத் துறையிலும் சரி—நீங் கள் முயல வேண்டாமா?" என்று அடுக்கடுக்காகக் கேட்டு நாட்டுப்புற மக்களின் ... உள்ளத்...

புதிய முகை முகைத்து, மலர் களைச் சிந்தும். ஆனால் சொக்கி முல்லை மலரைப்போல பற்களைப் படைத்தவளே தவிர முல்லை அல்லவே. மனம் என்றஒன்றைப் படைத்தவள் ஆயிற்றே. அந்த மனத்திலே விருப்பும் இருக்கும். வெறுப்பும் எழும். என்மீது விருப் பும், அவன்மீது வெறுப்பும் வளர்ந்திருக்கின்றதே. இதைக் கூட அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவனாகிவிட்டானே அந்தப் பொன்னன்.

அவனைக் குற்றம் சொல்லி என்ன பயன் ஆத்திரக்காரனுக் குப் புத்தி மட்டு என்று மிகப் பழய மொழி ஒன்றிருக்கின்றது. அந்த ஆத்திரம் அவன் அறிவை மறைத்திருக்கிறது. ஆகாத ஆட் டம் ஆடுகின்றான். என்னை முறைத்துப் பார்க்கின்றான். அந்தப் பார்வையிலே நான் காணும் கொடுமையை என்ன வென்று சொல்வேன்! தீர்த்துக் கட்டிவிடுகின்றேன் என்றல்லவா சொல்கிறான் தன் கண்களால்.

அன்று வயலில் அறுவடை நடந்துகொண்டிருந்தது. நான் ஒரு ஓரமாக நின்று ஏவல் செய்து கொண்டிருந்தேன். என்னைச் சாப்பாட்டுக்கு மாற்ற வந்த பொன்னன் என் கையில் இருந்த குடையை வெடுக்கென்று பிடுங் கிக்கொண்டு கீழே வீழ்த்துவது போல என்மீது உரசிக்கொண்டு வந்து நின்று 'சாப்பிடப்போ' என்று உணர்ச்சியற்றுச் சொன் னானே அப்போதே ...

...ன்றான் மான்

...அவனது உடலை நான்தானே அடக் கம் செய்தேன்!"

—அம்பலகாரர் பித்துப்பிடித்த வரைப்போல் புலம்பினார்.

பூட்டிய வண்டியை அவிழ்க்க வில்லை. மறுபடியும் வண்டியில் ஏறினார். வண்டி சோலையாண்டவர் கோயில் காட்டுக்குப் பக்கமாகக் கிளம்பியது.

நடுக்காட்டுக்குள் போய்க்கொண் டிருக்கும்போது, வண்டிக் கூண்டின் மேல் மடமடவென்று கற்கள் வீசப் பட்டன. அம்பலகாரர் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு இறங்கினார். அவருக்குப் பக்கத்தில் புடவை ஒன்று தாறுமாறாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்தது. அவர் நெஞ்சம் துணுக் குற்றது. அம்பலகாரருக்குக் கண் கலங்கியது. கடைசியாக வைத் திருந்த தோட்டாவைப் போட்டு எதிரிகளை மிரட்டுவதற்காக வானத் தைப் பார்த்துச் சுட்டார். தோட்டா வெடித்ததும், இருளடைந்து போயி ருந்த ஒரு ஆவரம் புதருக்குள் ளிருந்து சிரிப்பொலி கேட்டது.

"யாரடாவன் கோழை? வெளியில் வந்து கையிருப்பைக் காண்பித்துப் பார்! கள்ளர் தலைவன் வந்திருக் கிறேன்; குள்ளநரி வேலை வேண் டாம். கூட்டுக்கு வெளியே வா! நாட்டுக்கு அம்பலம் தயாராக இருக் கிறேன். கிளம்பு!" என்று கர்ஜித் தார் அம்பலகாரர். அத்தனை கால மாக அடக்கிவைத்திருந்த ஆத்திர மும் ஆவேசமும் அன்று அம்பலகார ரின் குரலில் முட்டி மோதிக்கொண்டு கிளம்பின.

இதைக் கேட்டதும் கையிலே கம் போடு புலிபோல் பாய்ந்தான் எதிரி!

...போகும் காட்சியைக் கண்டு நான் சிரிக்கப் போகிறேன்."

"மான்கொம்பு!"

"பழிக்குப் பழி தலைவரே! பசிக்குப் பனம்பழம் சாப்பிட்டீர்! பட்டுத் தவித்துத்தான் ஆகவேண்டும்! அன்றே மன்னிப்புக் கேட்டிருந் தால்...ஆணவத்தைக் குறைத்துக் கொண்டிருந்தால்... குஞ்சரத்தின் உருவத்தை அச்சுக் குலையாமல் கண்டிருப்பீர். வாழாமல் செத்த என் பெண்ணைப்போல் உன் மகளும் சாகப் போகிறாள். மணமுள்ள மல் லிகை, சூடுவதற்கு ஆளில்லாமல் கருகப்போகிறது தலைவரே!"

—மான்கொம்பு பேசிக்கொண்டே சிலம்பை வீசினான். சிங்கப்பெருமாள் அம்பலகாரர் பின்னாடியே போய் வண்டியிலிருந்த நெற்றிமட்டக் கம்பை எடுத்துக்கொண்டார். சுழற் றினார். கம்புகள் கூவின. கானகம் அமைதியாக இருந்தது.

"நன்றி கெட்டவனே!"

"மானத்தை விற்று விசுவாசி என்று பெயர் வாங்குவதைக் காட்டி லும், சுயமரியாதையோடு துரோகி என்று பெயர் வாங்குவதிலே நான் பெருமைப்படுகிறேன் தலைவரே!"

"தரம் கெட்டவனே! என்னைத் தலைவரே என்று அழைக்க உனக்கு அருகதை ஏது? துன்மார்க்கா!"

"உண்மைதான்! உம்முடைய வாழ்நாளில் உமக்கு எதிரே தலைவரே என்று துணிந்து அழைத்த பெரு மையே என்னைச் சேர்ந்தது. புரிய வில்லையா உமக்கு! பிரபு என்றும் பெரிய முதலாளி என்றும் அழைத்து அழைத்துச் சளித்துப்போன வாய் இன்றுதான் துணிந்து தலைவரே

...ஏற்பட்டது. அவ்விரைக் காட்டிலும் பத்து வயது குறைந்த மான்கொம்பு சளைக்காமல் கம்பைச் சுழற்றிக் கொண்டிருந்தான். பொன்வண்டின் ரீங்காரம் அவனது சிலம்புச்சுழலில் எழுந்தது. உணர்ச்சியும் உத்வேக மும் கொண்ட அவன், அம்பலகாரர் தளரத்தளர கம்பை அதிவேகமாகச் சுழற்றினான். தூரத்திலிருந்து மிதந்து வரும் குழலோசைபோல் அவனது சுழற்சியில் நாதம் கிளம்ப ஆரம்பித் தது. நேரம் செல்லச் செல்ல அம்பல காரர் தளர்ந்துவிட்டார். களைப்பால் முணகினார். மூச்சுத்திணறினார். மான் கொம்பின் அடி உரமாக விழுந்தது. அவரால் தாங்கமுடியவில்லை.

"மான்கொம்பு!" என்று கூவி விட்டார்.

"ஆம், மான்கொம்புதான் நான்! கொம்பு ஒடிந்தபின் மானுக்கு வாழ் வில்லை. மானம் போனபின் எனக்கு என்ன வாழ்வு! இது மானம் காக்கும் போராட்டம்! சாவைப்பற்றி கவலை இல்லை! வென்றாலும் கீர்த்தி, வீழ்ந் தாலும் கீர்த்தி! பேரிகை கொட்டிப் பெரும்படை திரட்டி அரும்பெரும் வெற்றிக்கு அந்நியர் களத்தில் கணீர்

...கிடக்கும் சிங்கப் பெருமாள் அம்பலகாரரின் வேதனைக் குரல் அவனுக்குக் கேட்டது. ஆனால் திரும்பிப் பார்க்க அவனுக்குத் துணி வில்லை.

பயங்கரமான யுத்தகளக் காட் சியைச் சித்தரிக்கும் ஓவியன், சித் திரம் முற்றுப்பெறும்போது அந்தக் காட்சியைக் காண அவனே பயப்படு கிறான்.

அற்புதமான நாவலைத் தீட்டும் எழுத்தாளன் கதையின் கடைசிக் கட்டத்தை எழுதும்போது அவ னுக்கே மயிர் சிலிர்க்கிறது.

தன்னுடைய ஆசானை—தன்னை வளர்த்தவனை—தனக்கு நம்பிக்கை கொடுத்தவனை பழிவாங்கத் துடித் தான் மான்கொம்பு! அவனுடைய அருமைப் புதல்வி பூவாத்தாள் அவன் உடலில் பெண்புலியாய் நிறைந்திருந்து கிழட்டுச் சிங்கத்தை மயங்கவைத்து விட்டாள்.

புதருக்குள்ளே பெருமூச்சுக் கேட் டது. களறியிலே ஓடிக் களைத்து வெறித்து நிற்கும் மஞ்சுவிரட்டுக் காளையைப்போல் இருந்த மான் கொம்பு தனது கடைக்கண்ணால் புதரைப் பார்த்தான்.

— 9ம் பக்கம் —

வெண்பாப் போட்டி-20.

ஈற்றடி :

பாலாற்றில் நீரோடு மா?

முடிவு தேதி 28-6-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

—4ம் பக்கத் தொடர்ச்சி —

அவன் எப்போது தன் பக்கம் திரும்புவான் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சிங்கப் பெருமாள் அம்பலகாரர்,தன் அருகில் வரும்படி கையைக் காட்டி அவனை அழைத்தார். நாட்டியமாடி முடிந்த நாட்டியக்காரி, அவளது குருவை வணங்கப் போவதைப்போல் அடி மேல் அடியெடுத்து வைத்தபடி,மான் கொம்பு, அம்பலகாரரின் காலடிப் பக்கமாகப் போனான்.

“மான்கொம்பு! கள்ளர் சரித்திரத் திற்கே அவமானம் என்றாய்! தவறு! பெருமைதான். அந்நியன் ஒருவ னிடம் தோல்வி பெற்றிருந்தாலல் லவா நமக்குக் கேவலம்! நான் பெறவேண்டிய பாடத்தை ஒரு கள்ளர் குல வீரனிடமே பெற்றேன். ஒரு கள்ளர் தலைவன் தன்னுடைய அடாத செயலுக்காக அவனுடைய எதிரியிடம் அபராதம் கட்டினான் என்ற இழிச்சொல் வராமல் நமக் குள்ளேயே யாருக்கும் தெரியாமல் தீர்த்துக்கொண்டது கள்ளர் சரித் திரத்திற்குப் பெருமை தரக்கூடிய செயல்தான்! நான் சரித்திரத் தைக் கெடுக்க இருந்தேன். நீ அதை மாற்றி எழுதிவிட்டாய். ஆனால் ஒன்று! குஞ்சரத்தை அங்கஹீனப் படுத்தாமல், எனக்குச் சொல்லி யனுப்பி இருந்தால், நான் ஓடோடி வந்திருப்பேன். மன்னிப்புக் கேட் டிருப்பேன்! ஆம்; யாருக்கும் வளை யாத தலை, உனக்கு வளைந்திருக்கும்! எவருக்கும் படியாத நாக்கு, உன் னிடம் பணிந்திருக்கும்! அவசரப் பட்டு விட்டாய்! நீ என்ன செய்வாய்! நீ மானக் கள்ளன்!”—ஆயுள் முழு தும் செய்த கொடுமைகளுக்கெல் லாம் பிராயச்சித்தம் தேடிக்கொள் வதுபோல் அம்பலகாரர் பேசினார்.

அவ்வளவுதான்! “முதலாளி!” என்று கத்தினான் மான்கொம்பு.

“மான்கொம்பு!...நீயா...நீயா!”— தலையைத் தூக்கி எழுந்திருக்க முயன் றார் அம்பலகாரர். அவரால் முடிய வில்லை. மான்கொம்பு அருகில் உட் கார்ந்து அவர் தலையை தன் மடியில் வைத்துக்கொண்டான். மான்கொம்பு வடித்த கண்ணீர் அம்பலகாரரின் நெற்றியில் விழுந்தது.

அம்பலகாரர் அவனை நிமிர்ந்து பார்த்து மறுபடியும் பரிதாபமாகக் கேட்டார்:

“குஞ்சரத்தின் உடலையாவதுநான் பார்க்கக்கூடாதா? பிணத்தைக் காண்பியப்பா! ஒருமுறை பார்த்துக் கொள்கிறேன்” என்றார்.

மான்கொம்பு வாய்விட்டுக் கதறி னான்.

“இன்னொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள். அம்புலியைக் காட்டி, அழுகையை நிறுத்திய அறுபதுநாள் பருவத்தில், கிண் ணத்தை மறைக்கும் குஞ்சரத்தின் கன்னத்துக் குழியைக் கண்டுப் பூரித்திருந்தவன் இந்த மான்கொம்பு! அந்தக் கன்னத்தையா நான் அறுத் தேன்...இதை நீங்கள் நம்புகிறீர் களா முதலாளி?”

“மான், நீ என்ன சொல்கிறாய்? கன்னத்தை அறுக்க அஞ்சி கடு விஷத்தைக் கொடுத்துவிட்டாயா?”- பைத்தியம் பிடித்தவரைப்போல் பேசினார் சிங்கப்பெருமாள்.

“படைத்த தாயைத் துயரப்படுத்தி விலை கொடுத்து வாங்கிய பொம் மையை உடைத்து மகிழும் உல கறியாக்குழந்தை என்று என்னை நினைக்கிறீர்கள்? இல்லை!”

“மான்கொம்பு, புரியும்படி பேசு! என் புத்திரியைக காண்பி! அன்னம் போல் இருந்தாள்! கிளியைப்போல் குழைவாள்! இப்போது எப்படி இருக்கிறாள் மான்கொம்பு!”-கேட் கும்போது அவர் உதட்டிலே நீர் சுரந்து நின்றது. வாஞ்சை ததும்பக் கேட்டார்.

அதற்குமேல், அம்பலகாரரைத் துயரப்படுத்த அவனுக்கு மனம் இல்லை.

இவன்தான் மான்கொம்பு.

“முதலாளி என்னைப் பாருங்கள்” என்றான்.

அம்பலகாரர் படுத்தபடியே நிமிர்ந்து மான்கொம்பைப் பார்த்தார்.

“இதோ என் விரல் காட்டும் இடத் தைப் பாருங்கள்” என்றான் அடுத்து.

மான்கொம்பு வலது கையை நீட்டி புதருக்கு வெளியே ஒரு பனைமரத் தைக் குறிவைத்துக் காண்பித்தான். அம்பலகாரர் அந்தப் பனைமரத்தைப் பார்த்தார்.

கோரம்! பயங்கரம்! பனைமரத்தின் கொண்டையில் குஞ்சரம் உட்கார வைத்தபடி நன்றாக இறுகக் கட்டப் பட்டிருந்தாள். வாய், துணியால் மூடப்பட்டிருந்தது.

“அட பாவி! கொன்று விட்டாய்! இவ்வளவு நேரம் ஏதேதோ சொன் னாயே மான்கொம்பு, இதோ வண் ணான் பொதியைப்போல் மூட்டை கட்டி வைத்திருக்கிறாயே! ஐயோ! ஐயோ!!”புலம்பினார். அவரது அங்க மெல்லாம் துடித்தது.

“இல்லை முதலாளி! குஞ்சரத்திற்கு ஆபத்து ஏதும் இல்லை. சுகமாக இருக்கிறது. நமது சண்டையைக் குஞ்சரம் பார்க்கவும் வேண்டும், அதே நேரத்தில் சத்தம் போடவும் கூடாது என்பதற்காக நான் அவ் வாறு செய்தேன்” என்று ஆறுதல் சொன்னான். இருவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள்.

இருட்டு வந்தது. மான்கொம்பு கைத்தாங்கலாக அம்பலகாரரைப் புதருக்கு வெளியே கூட்டி வந்து வண்டியிலேற்றிவிட்டு, குஞ்சரத்தை இறக்கி, அன்போடும் மரியாதை யோடும் அழைத்து வந்தான்.

துயரத்தின் சேற்றில் மிதியுண்டு கிடந்த மனிதன், திடீரென்று, இன் பத்தின் விளிம்புக்கு வரும்போது அவன் உடல் வியர்க்கிறது. உச்சி குளிர்கிறது. நொந்து போயிருந்த சிங்கப்பெருமாள், குஞ்சரத்தைக் கண்டதும் பேசமுடியாமல் வண்டி யில் சாய்ந்தார்.

“ஆத்தா!...” என்றார். பிரிய முள்ளவர்களை அம்பலகாரர்கள் இவ் வாறுதான் அழைப்பார்கள்.

“அப்பா...!”

“மான்கொம்பின் காலில் விழு! நான் உன்னைக் கொன்றவன். அவன் உன்னைப் பெற்றவன்” - என்றார் சிங்கப்பெருமாள்.

குஞ்சரம் மான்கொம்பைத் திரும் பிப் பார்த்தாள். அவன் தலைகுனிந்து நின்றான். கையிலே இருந்த கம்பு ‘தொப்’பென்று கீழே விழுந்தது.

அவள் தேம்பினாள்! அவன் பெரு மூச்சு விட்டான்.

மிரண்டு ஓடிய மாடுகள் திசைக் கொன்றாய் நின்றுவந்தன.

வழக்கமாக, சிங்கப்பெருமாள் அம்பலகாரரை வண்டியில் உட்கார வைத்துக் கம்பீரமாக வண்டி ஓட்டிக் கொண்டு போகும் மான்கொம்பு கடைசி முறையாக அவரை அடித் துத் தூக்கிப் போட்டுக் கொண்டு சூரைக்குடிக்குள் நுழைந்தான்.

அம்பலகாரரின் வீட்டுவாசலில் ஏகப்பட்ட கூட்டம். மான்கொம்பின் திட்டப்படி, அல்லி வேலு கையிலே ஆரத்தியோடு மூவரையும் வரவேற் றான். ஆனால்...?

இத்துணை அல்லல்பட்டு ஆற் றொணாத் துயரடைந்து வந்த குஞ் சரம் அவளது வாழ்நாளிலே சுகத் தைப் பெறவில்லை. தும்பைப் பூவைப் போல் தூய்மையாகத்தான் இருந் தாள். மல்லிகை மலரைப்போல் அவள் இருதயம் மணமுள்ளதாகத் தான் இருந்தது. ஆனாலும் அவள் வாழவில்லை. கன்னிப்பெண்ணாகவே, வாழ்ந்தாள்.பூவை·ப பார்க்கும்போது கூந்தலைத் தடவிப் பார்க்கவேண்டிய பருவத்தில், நிலவைக் காணும்போது துணைவன் இல்லையே என்று ஏங்க வேண்டிய பருவத்தில், ஜோடிப்புறாக் கள் பறக்கும்போது இன்பநினைவு களுக்கு பலியாகும் பருவத்தில் அவள்-அந்த யுவதி - மடிப்பு விழாத மலர் இதழாய், அணில் கடிக்காத கனியாய் வாழ்ந்து இமைகளை மூடி னாள்.

ஒரு காலத்தில் போட்டி போட்டுக் கொண்டு வந்த மாப்பிள்ளைகள், இந்தக் கலவரத்திற்குப் பிறகு வர வில்லை. புடவைக் கடையில், விலை போகாது கிடந்து அழுக்கேறிப் போன புடவையைப்போல் குஞ்சரம் புறக்கணிக்கப்பட்டாள்.

ஊமைகளும், நொண்டிகளும் இல் லறம் நடத்துவதை அவள் கண் டாள். ஊருக்குத் தெரியாமல் கெட்டு, யாருக்கும் தெரியாமல் சிசுக்கொலை செய்தவர்கள் இன்ப மாக வாழ்வதைப் பார்த்தாள். ஆனாலும் கவலைப்படவில்லை. இறுதி வரை சிரித்துக்கொண்டே இருந்து, வாழ்ந்து, உலகத்திற்கு சிலை வடி வத்தைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள்.

அந்த உத்தமியின் சிலை, இன்று, குன்றக்குடியில் இருந்து சோலை யாண்டவர் கோயிலுக்குப் போகும் பெரிய சாலையில் இருக்கும் சூரைக் குடி என்ற ஊரில் இருக்கிறது. பல பேர், அந்தச் சாலையில் போகிறார்கள், வருகிறார்கள். அந்தச் சிலையைப் பற்றிப் பேசுகிறார்கள். பத்தினிப் பெண்டிர் சிலர் அந்தச் சிலைக்குக் குங்குமம் வைத்து வணங்கிப் போகிறார்கள்.

இரவும் பகலும் அந்தப் பாதையில் வண்டிகள் போய்க்கொண்டிருக் கின்றன. அமைதியான இடத்தில்- ஒரு ஊரணிக் கரையில் வாழாத குஞ்சரம் அனாதைப் பெண்ணாய் சிலை உருவில் இருக்கிறாள்.

வண்டியில் போகிறவர்கள் எட்டி யெட்டிப் பார்க்கிறார்கள். பக்கத்தில் இருக்கும் அவர்களது குழந்தை களுக்கு ‘அதுதான் வாழாத பெண் ணின் சிலை’ என்று காட்டுகிறார்கள்.

பகலும் இரவும் வந்து வந்து போகின்றது. வண்டிகளும் மோட் டார்களும் வந்து வந்து திரும்புகின் றன. சிலை இருந்த இடத்திலேயே இருக்கிறது.

— முற்றும் —

★ ★ ★

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

வைத்திருந்த பணத்தை எடுத்து வந்து பாலாவின் கண்படும் இடத் தில் வைத்து விட்டு சாகலாமென்று கருதி தோட்டத்துக்கு ஓடினான். தோண்டினான் தான் பாடுபட்டு புதைத்து வைத்திருந்த புதையலை. எடுத்துக்கொண்டே வழியும் கண் ணீரோடு திரும்பினான். ஆயிரம் எண்ணங்கள் அவன் நெஞ்சில் தேளாகக் கொட்டின. நுழைந்தான் உள்ளே. தனக்கென்று தான் போட் டிருந்த கயிற்றிலே தன் அருமைத் தங்கை தொங்கக் கண்டான். துடி துடித்து ஓடி கதறியவாறே கயிற்றை அறுத்தான். உயிர் பிரியுந்தருவாயில் இருந்த பாலா சமாளித்துக்கொண்டு கண்திறந்தாள்...பேச முடியவில்லை. “அண்ணா! என் மானம் இழந்தேன். ஆனால் தங்கள் மானம் காக்க நான் சாவைத் தேடிவிட்டேன்” என்று சொல்லுவது போல் தோன்றிற்று. சில விநாடிக்கெல்லாம் பாலா பிண மானாள்! கதறினான்...கதறினான்! ★

தி. மு. கழகத்தைப்பற்றி கம்யூனிஸ்டுகளின் 'அந்தரங்கம்'!
பொய்க்குற்றம் சுமத்தத் திட்டமிட்டது உண்மையா?

திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக் கழகம்-இவற்றின் மிகப் பெரிய வளர்ச்சியை இந்தியக் கம்யூனிஸ்டுகள் மிக மிகக் குறைத்துப் பேசுவார்கள். எழுதுவார்கள்! ஆனல்-உள் கட்சிப் போராட்டம்-விவாதம் என்ற முறையில்-திராவிட முன்னேற்றக் கழகத்தின் வனப்பும் வளர்ச்சியும் பற்றி பெரிதும் கவலைப்பட்டுத் தங்களின் மனக் குமுறலைக் காட்டிக் கொண்டுள்ளார்கள். இரண்டு கழகங்களும் ஒழிக்கப்பட்டாலன்றி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வளர்ச்சியில்லை வாழ்வில்லை என்பது கடைசித்தரமான கம்யூனிஸ்டுக்கும் தெரியும். ஆகவே 1952 இறுதியில் சென்னை மாகாண கமிட்டியைச் சேர்ந்த ஒரு 'அரை டசன்' கம்யூனிஸ்டுத் தோழர்கள் தங்கள் கருத்துக்களை-மத்தியக் கமிட்டிக்குத் தெரிவித்தார்கள். அந்த விண்ணப்பத்தின் பெயர்-எனது மாஜிக் காம்ரேடுகள்-கலங்கிப் போன கம்யூனிஸ்டுகள் தந்த பெயர் "திராவிடக் கழகம்-திராவிட முன்னேற்றக் கழகம்பற்றிய ஒரு குறிபபு" என்பதாகும். அதன் முன்னுரையில், "இந்த மாகாணத்திலுள்ள கட்சிகளில் மிகவும் கடினமான பிரச்சினைகளில் ஒன்று, திராவிடக் கழகத்தையும் அதிலிருந்து பிரிந்து வந்த பகுதியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சரியாக மதிப்பீடு செய்வதாகும். இந்த 'தஸ்தாவேஜு' அந்தக் குறிப்பிட்ட பிரச்னையை ஆராயும் நோக்கத்தைக் கொண்டது" என்று தயாரிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் வாய்ப் பேச்சுக்கும்-உள்ளத்து எண்ணத்துக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உண்டு என்பதை உண்மையாக்குவதுதான் மேற்கண்ட முன்னுரையாகும். கழகத்தை மதிப்பிட்ட நபர்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள பலரும் விரும்புவீர்கள் என்ற எண்ணத்தில், அவர்கள் கையொப்பமிட்டிருக்கும் வரிசையில் கீழே குறிப்பிட்டிருக்கிறேன்,—1. எஸ். ராமகிருஷ்ணன், 2. ஆர். கே. கண்ணன் 3. நாகராஜன் 4. கிருஷ்ணய்யா 5. வி. ராதாகிருஷ்ணன் 6. முகவை ராஜமாணிக்கம், இடம் சென்னை, தேதி 16-12-52—இந்த அறுவரில் நீங்கள் கேள்விப்பட்டவர்களாகத் தென்படுபவர்கள் இருவர்தான்! அதிலும்இந்தஎஸ்.ராமகிருஷ்ணன் என்ற பார்ப்பன நண்பரை நான் நன்கு அறிவேன்- அண்மையில் தான் மாகாணக் குழுவிலிருந்து விலக்கப்பட்டார்- தற்போதைக்கு கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்ள அவர் அனுமதிக்கப்படுவதில்லை!

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒரு ரகசிய அறிக்கையை திராவிடத்தின் எல்லாப் பகுதி மக்களும் அறிந்துகொள்ள வேண்டும்-முக்கியமாக இன்னும் கம்யூனிஸ்டுக் கட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் காம்ரேடுகளும் உறவு வைத்துக் வைத்துக்கொண்டிருக்கும் மற்ற கட்சிக்காரர்களும் உண்மையை உணர வேண்டும்!

சென்னை, 6-2-'53

எல்லாக் கட்சி யூனிட்டுகளுக்கு மட்டும்.

திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம்—இயக்கத்தைப் பற்றி சென்னையில் சில தோழர்கள் தயாரித்த தஸ்தாஜேஜு ஒன்று இத்துடன் அனுப்பப்படுகிறது.எல்லாக் கட்சி யூனிட்டுகளும் விவாதம் செய்வதற்காக இது அனுப்பப்படுகிறது. பொலிட் பீரோவுக்கும் இது அனுப்பப்பட்டுள்ளது. இந்ததஸ்தாவேஜு'பற்றி மாகாணக் கமிட்டியின் விமர்சனமும் இத்துடன் வர வேண்டுமென்று தோழர்கள் எதிர்பார்ப்பது இயற்கை. மாகாணக் கமிட்டியின் விமர்சனம் தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அது உங்களுக்கு அனுப்பப்படும். உங்கள் விவாதத்தின் முடிவுகளை மாகாணக் கமிட்டிக்குத் தெரியப்படுத்தவும்.

இதுபற்றிய விவாதம் கண்டிப்பாக உள் கட்சி விவாதமாகத்தான் இருக்க வேண்டும். கட்சி அங்கத்தினர்களைத் தவிர வேறு யாருக்கும் இந்த தஸ்தாவேஜு போகக் கூடாது. அனுதாபிகளிடம் இந்த தஸ்தாவேஜு கொடுக்கப்படவோ அல்லது இதுபற்றி ரிப்போர்ட் செய்யவோ கூடாது.

வாழ்த்து,
தமிழ் மாகாணக் கமிட்டி செயற்குழு,
இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி.

தோழர்கள் தயாரித்தஅறிக்கையையும், செயற்குழுவின் அறிவிப்பையும் பெற்றுக் கொண்ட என்னைப் போன்ற கம்யூனிஸ்டுகள் எல்லாம் திடுக்கிட்டுப் போனேம். அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று இணைந்து வளர வேண்டும் என்ற நல்விதிக்கு மாருக—திராவிடக் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் ஒழித்துக் கட்ட வேண்டும் அல்லது தங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உபதேசங்களைக் கண்டோம். ஏற்றுக் கொள்ளமுடியாத குற்றச்சாட்டுக்களை எடுத்துக் காட்டினல் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அதுபோலவேதான் விவாத முடிவுகளை-ஏதேதோ பாரம்பரியச் சொற்களைக் கூறி மறைத்தார்கள். கம்யூனிஸ்டுத் தலைமையின் கல்நெஞ்சத்தின் கடடளையை கரங்கூப்பி ஏற்றுக்கொண்டவர்கள்தான் ஏராளம்! சில முக்கியமான கருத்துக்களைக் காணுங்கள். கண்டபின் சொல்லுங்கள். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சொல்லுக்கும், செயலுக்கும், தென்னகத்தின் வாழ்த்தைப் பெற யோக்யதை உண்டா என்பதை! நாணித் தலை குனிய வேண்டிய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள்-அரசியல் நாகரிகமறியாத நல்லவர்கள் என்னை மன்னிப்பார்களாக!

1. "திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியினரால் நசுக்கப்பட்டு வந்த கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அனுதாபம் காட்டுவது அடக்கு முறையைக் கண்டித்துப் பேசுவது, சோவியத் யூனியனையும், சீனத்தையும்புகழ்ந்து பேசுவது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்வது, என்னும் பல தேன் துளிகளை மக்கள் முன் வைத்தனர்."

2. "தென்னுட்டு மக்கள், அடிப்படையில் திராவிட இனத்திலிருந்து உதித்தவர்கள் என்பது உண்மைதான். நமது மொழிகள் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, முதலியன) திராவிட பாஷை இனத்தைச் சேர்ந்தவையே. நம் கட்சித் தோழர்கள் சிலர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். மார்க்சிய வாதிகள் தமிழ் மக்கள் வரலாறு, கலாச்சாரம், முதலியவைபற்றி நிர்ணயிப்புகள் செய்து புதிய தமிழகம் எனும் கோஷம் எழுப்ப வேண்டும்."

3. "காந்தியையும், நேருவையும் வர்க்கபேதமில்லாத முறையில் வர்ணித்தோம்; அவர்களுக்கு வால் பிடித்தோம். தலைமைநம்மைத் தாக்கிய காலத்தில்கூட நம்மைச் சிறந்த காங்கிரஸ்காரர்கள் என்று வாதித்தோம். உதாரணமாக டயகாவ் வன்மையாகக் கூறியுள்ளது போன்று காங்கிரஸ் மேலிடத்தின் தீர்மானப்படிதான் நடந்துகொண்டோம் என்று வாதாடினேம். காங்கிரஸ் மேலிடம் பாஸிஸ்டு எதிர்ப்புக் கொண்டது, நாமும் பாஸிஸ்டு எதிர்ப்புக் கொண்டவர்கள் என்று வாதாடினேம். முஸ்லீம் லீகுக்குப் பொது ஜனங்கள் ஆதரவு திரண்டு நிற்பதினல் லீகுக்கு வால் பிடிப்பது அவசியம் என்று நாம் எண்ணினேம். இதற்கு எதிர்ப்பாக கட்சியில் செக்டேரியனிஸம் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் நமது கொள்கை கட்சியை தனிமைப்படுத்திற்று. தன்னந் தனிமையில் ஒரு சின்னஞ் சிறு கோஷ்டியாக உழன்ருேம்; சொந்தக் குட்டையில் கிடந்து ஊறும் மட்டையாயிருந்தோம். கட்சி இத்தவறுகளையெல்லாம் பரிபூரணமாகப் பரிசீலித்து, அதன் படிப்பினைகளைக் கிரஹித்துக் கொள்ள வேண்டும். ஐக்ய முன்னணியைக் கட்டுவதற்குக் கட்சிக் கவசம் அணிந்துகொள்வது அத்தியாவசியம்"

4. "திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் பிரிவினைக்கு நிற்கின்றன. இதனை எதிர்த்து நம் கட்சி சர்வகாலமும் கடினமாகப் போராட வேண்டும். போராட்டத்தின் மூலமாகத்தான் இந்தச் சித்தாந்தத்தை ஒழித்துக் கட்ட முடியும். ஆனல், இதிலிருந்து இவைகளை பிரச்சினைகள்மீது ஐக்கிய முன்னணிக்கு அழைப்பதில் தவறில்லை. தி. க., தி. மு. க.வுடன் ஐக்கிய முன்னணிப் போர்த் தந்திரத்தைப் பயன்படுத்தி, இந்தக் கட்சிகளை, இந்தக் கட்சிகளின் தலைமைகளை, உறுப்புகளை, அங்கத்தினர்களை நாம் அணுகவேண்டும். இது மிகவும் கஷ்டமான வேலை. புதிய தமிழகக் கிளர்ச்சியினல் இவர்களை நம் பக்கம் இழுத்து ஆகர்ஷிக்க முடியும்."

"நேரு-போஸ் இடதுசாரி சூழ்ச்சிகள் நமது கட்சியின் பாதுகாப்புக்குக் குழிதோண்டி விட்டது. இதனல் நமக்குப் பத்தாண்டுகளுக்குமேல் பெருந்தீமை ஏற்பட்டது என்பதை நினைவூட்டிக் கொள்வோமாக. நம் கட்சியின் தனித்தன்மை பாதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பிரிவினைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே சீர்திருத்தவாத வகுப்புவாத அரசியல் போக்கு உருவாகி வருகிறது. கட்சி அதன் திசை தவருது இயங்க வேண்டும். கட்சி, இந்திய மக்களின்-தமிழ் மக்களின் சரித்திர பூர்வமான வளர்ச்சி முழுவதையும் உணர்ந்தாலன்றி, இந்தியக் கலாச்சாரத் தத்துவம், தமிழ்க்கலாச்சாரம் முதலியவற்றை கட்சி கசடறக் கற்ருலன்றி, இந்திய மக்களின் மகத்தான பாரம்பரியத்தை மார்க்சியவாதிகள் என்ற முறையில் வியாக்யானம் செய்யக்கூடிய நிலையிலிருந்தாலன்றி, கட்சி மார்க்சியத்தை இந்தியமயமாக்குவதென்பதோ — தமிழ்மயமாக்குவதென்பதோ முடியாத காரியம். புரட்சிக்கு இந்தியப் பாதையை கட்சியினல் வகுக்க முடியாது. காந்தியம்-பெரியார் தத்துவம் இரண்டையும் எதிர்த்துப் போராட முடியாது. மகத்தான இந்தசித்தாந்தரீதியான பணியைப் புறக்கணிப்பது என்பது நமக்குப் பேராபத்தேயாகும்."

"காந்திக்கும் நேருவுக்கும் வால் பிடித்தோம் - முஸ்லீம் லீகுக்கும் வால்பிடித்தோம்" என்று வெட்கத்தை விட்டு, வேதனையுடன் எழுதியிருக்கும் தோழர் ராமகிருஷ்ணன் என்பவர்கூடத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பழித்துப் பேச வருகிருர். இதே நபர்தான் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைப் பீடத்துக்கு அரசியல் போதனை செய்திருக்கிருர். மத்திய கமிட்டிக்கு எச்சரிக்கைகளை அனுப்பியுள்ளார்! தமிழ் மாகாணக் கமிட்டியின் முடிவென்ன? பொலிட் பீரோவிலேயிருப்பவர்கள் இந்த விண்ணப்பத்தை எந்தக் குப்பைக் கூடையிலே தூக்கிப் போட்டார்கள்? வடநாட்டு மூலவர்கள் தமிழ் கலாச்சாரத்தைக் கசடறக் கற்று விட்டார்களா? 1952-ம் ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்று ரகசிய அறிக்கைகள் அனுப்பிய மேதைகள் 1958-ம் ஆண்டு, அமிர்தசரசில் கூடி பிரிவினையைக் கண்டிப்பது ஏன்? 1956-ம் ஆண்டு, பாலக்காடு மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்புக் கேட்டு, நிபந்தனை போட்டவர்கள், 1952-ம் ஆண்டில் "எங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் - ஏற்றுக்கொள்ளுங்கள் - நாங்கள் கொள்கை தவருத கற்புக்கரசிகள்" என்று அறிஞர் அண்ணு அவர்களிடம்-ஜீவானந்தங்கள் கொட்டியளந்து விட்டு - இன்றைய தினத்தில் 'அறிவகம்' பற்றி அவதூறு பேசித் திரிவது ஏன்?

கூடலரசன்.

—3ம் பக்கத் தொடர்ச்சி—

விளக்கை "மலையேற்று" என்றும் மங்கலச் சொற்களால் தெரிவிப்பது செட்டிநாட்டு மரபு. மார்கழி மாதம் 1-ந்தேதி அல்லது தை மாதம் 1-ந்தேதி என்பதற்கு ஒன்றுந் தேதி என்று சொல்லாமல் முதல் தேதி என்றுதான் சொல்லுவர்.

"வ. ரா." அவர்கள் "ஊழியனில்" துணை ஆசிரியராகஇருந்த போது, செட்டிநாட்டுச் சொற்கள் அவர் கவனத்தைக் கவர்ந்தன, "மணி என்ன?" என்று வேலையாளைக்கேட்டதற்கு அவன் "அரை மணி" என்றுனும்.அரை மணி என்று கேள்விப்பட்டதில்லையே என்று வ. ரா.விழித்தாராம். செட்டிநாட்டில், 12-30 மணி என்பதை அரை மணி என்று சொல்லுவது வழக்கம். செட்டியார்கள் அல்லவா? சொல்லிலும் செட்டாக இருக்க வேண்டாமா?

இன்னொரு தடவை, வ. ரா. ஒரு செட்டியாரைச் சந்தித்த போது அவருடைய வருவாயைப் பற்றி வினவினாராம். "வடிவாக 300" என்று அவர் சொன்னது வ. ரா.வுக்கு வியப்பைத் தந்ததாம். சரியாக, சில்லறைத் தொகைகளின்றி என்ற பொருளில் "வடிவாக" என்ற சொல் செட்டிநாட்டில் வழங்கி வருகிறது.

Flora and Fauna என்பதைக் குறிக்க, செடிகொடி மரவிடை என்று எழுதுவது செட்டிநாட்டு வழக்கம்.

'On Demand" என்பது "அண்டிமென்" என்னும் தமிழ்ச் சொல்லாகிவிட்டது.

செட்டி நாட்டுப் பெண்கள் ஆங்கில மொழியில் வழங்கும் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் பலவற்றை, பிறர் துணையின்றித் தாங்களே அமைத்துக் கொண்டிருக்கின்றனர். அவற்றுள் சில;

Press Button — அமுக்குப் பொத்தான்.

Woollen—கொச்சிநாய்க்கயிறு.

Face Powder—புட்டாமா.

Snow—முகவெண்ணெய்.

Orange—கிச்சிலிப்பழம்.

Sabota—சீமை இலுப்பை.

பரவாயில்லை என்று பிறர் சொல்லுவதை, செட்டிநாட்டில் கல்வியறிவில்லாதவருங்கூட, "குற்றமில்லை" என்று இனிய தமிழில் சொல்லுவர். அங்கு, "புதுமை" என்னும் சொல், பழமை தொட்டே வழங்கி வருகிறது.

செட்டிநாட்டு நகைகளின் பெயர்களும் செந்தமிழில் உள்ளன. செவுடு (கழுத்து அணி), தண்டை (கையில் அணிவது), அருநாண் (அரைஞாணில் பயன்படுத்தும் சங்கிலி) என்ற பெயர்கள் உண்டு. செட்டிநாட்டுச் சிற்றுண்டிகளுக்குத் தேன்குழல் சீடைக்காய், மனகோலம் (ஒரு வகை இனிப்புச் சிற்றுண்டி) என்ற தமிழ்ப் பெயர்களே நிலவி வருகின்றன.

வணிக முறையில் பல சொற்களைத் தூய தமிழில் செட்டியார்கள் வழங்கும் முறை கேட்பாரை வியப்படையச் செய்வதாக, நெல்லை நகர சபையின் தலைவராகயிருந்த ப. ரா. அவர்கள் சொல்லுவார்கள். சான்று, "Please cross this draft" என்பதற்குச் செட்டியார்கள், "இந்த உண்டியலை வெட்டிக் கிழியுங்கள்" என்பர். Draft என்பது உண்டியல், Draft payable at sight என்பது தரிசன உண்டியல். வெட்டுதல் Bearer என்னும் சொல்லை வெட்டுதல். கிழித்தல் - Cross பண்ணுவதற்குக் குறுக்குக் கோடு கிழித்தல்.

திறவுகோல் என்ற பொருளில் "திறகுச்சி" என்ற சொல்வழங்கி வருகிறது. பழங்காலத்தில் இது, மரத்தால் செய்யப் பெற்றதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். (இரும்பு, வெள்ளி போன்ற பொருள்களால் செய்யப்படும் அளவுக் கருவிகளும் "மரக்கால்" எனப் பெயர் பெற்றிருப்பதுபோல).

தமிழகத்தின் பல பகுதிகளில் கிரகப்பிரவேசம் என்ற சொற்கள் வழங்கி வருகின்றன. ஆனால், செட்டிநாட்டில், இப்பொருள்களில் முறையே (புது மனையில்) குடி புகுதல், பெண் அழைப்பு என்ற சொற்களை எல்லோரும் பயன்படுத்தி வருகின்றனர்.

உணவைக் குறிக்கும் சொற்களும் தமிழ்ப் பெயர்களே செட்டிநாட்டில் வழங்கி வருகின்றன. திருமண வீட்டில் மணமகன் மணமகளைக் கை பிடித்த அன்று பெண் வீட்டார் வழங்கும் உணவை "கைபிடிச் சோறு" என்பர். "தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்" என்று கம்ப ராமாயணம் பாலகாண்டம் திருமணப் படலத்தில் வருவது இங்கு கருதத்தகும்.

இனி, செட்டி நாட்டில் வழங்கும் முறைப் பெயர்களைப் பார்ப்போம். தாயாரை 'ஆத்தாள்' என அழைக்கின்றனர். இது ஆய்-ஆள் என்பதாகும். "யாயும் யாயும் யாராகியரோ" என்பது குறுந்தொகை வாக்கு. ஆய் என்பது தாய் என்றும் யாய் என்றும் வழங்கப்பெறும், இங்கு "ஆய்" என்ற முறைப்பெயர் பகுதியாகி "ஆள்" என்னும் பெண் பால் விகுதி பெற்று ஆத்தாள் என மருவி வழங்கப்படுகிறது. பட்டினத்தடிகள்கூட இச்சொல்லைக் கையாண்டிருக்கிறார்.

தந்தையாரை 'அப்பச்சி' என்று செட்டிநாட்டில் குறிப்பிடுவதுண்டு. அப்பன் என்ற சொல்லிலிருந்து இது மருவி வழங்குகிறது.

தாயின் தாயையும் தந்தையின் தாயையும் வெவ்வேறு சொற்களால் குறிப்பது செட்டிநாட்டு வழக்கம். தாயின் தாய் "ஆயாள்", அதாவது ஆய்-ஆய். தந்தையின் தாய் அப்பத்தாள், அதாவது அப்பன்-ஆத்தாள்.

என் தந்தை என்பது 'எந்தை' என இலக்கியத்தில் சுருங்கி வழங்குவதுபோல அப்பத்தாள் என்ற சொல்லும் சுருக்கமாக வழங்கி வருகிறது. அண்ணு, அண்ணுச்சி என்று பிற இடங்களில் சொல்லுவதை 'அண்ணன்' என்று இங்கே சொல்லுவார்கள். 'அன்' என்ற ஆண்பால் விகுதி கொடுக்கப்பெற்று இலக்கண உருவம் சிதையாமல் இச்சொல் வழங்கி வருகிறது. செட்டிநாட்டில் அண்ணன் என்ற சொல் சிறிய தந்தையாரையும் குறிக்கும். அண்ணனின் மனைவியை 'அண்ணன் பெண்டி' என்று அழைப்பது செட்டிநாட்டு வழக்கு. 'பெண்-ட்-இ' என்ற தொடரில் இ' என்ற விகுதி பெண்பாலை உணர்த்துகிறது.

ஆச்சி (ஆய்ச்சி) என்பது அக்காளைக் குறிக்கும். குடும்பத் தலைவியையும் 'ஆச்சி' என்று அழைப்பர்; சிறிய தாயாரையும் 'ஆச்சி' என்பர்.

அம்மான்; அம்மை என்பது தாயைக் குறிக்கும். அவள் வழி வந்த ஆடவன் என்பதைக் குறிக்க 'ஆன்' விகுதி உளது. எனவே, இது தாய் மாமனைக் குறிக்கும். கரிகாற்சோழன் துறையூர்க்கு அருகில் உள்ள கழுமலத்தில் தலை மறைவாக இருந்த நாளில் அவனுக்குப் பெருந் துணையாக இருந்த இரும்பிடத் தலையாரைக் குறிக்கின்றபோது உரையாசிரியர்களால் "இரும்பிடத் தலையார் எனும் தம் அம்மானை" என்று அவன் தாய் வழி மாமன் குறிப்பிடப் பெற்றமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

முறைப் பெயர்களுக்கு முன்னால், 'நப்பச்சி', 'நாத்தாள்' என்று 'ந' என்ற எழுத்தைச் சேர்க்கும் வழக்கும் செட்டிநாட்டில் உண்டு. சிறர் என்னும் பெயருக்கு முன்னால் சிறப்பை உணர்த்த 'ந' என்ற எழுத்துச் சேர்க்கப்பெற்ற பண்டைத் தமிழ் முறையை இது தழுவியது." ★

★

எங்கும் கிடைக்கும்.

பதிவு எண்: எம். 6529 21-6-58

வெண்பாப் போட்டி

19. பொல்லாத மாலைப் பொழுது.

தென்றல் தவழ்ந்தென்ன? திங்களொளி சூழ்ந்தென்ன?
இன்னமுதம் என்முன் இருந்தென்ன? — அன்பத்தான்!
கில்லாப் பொருள்தேட நீர்சென்றீர்! வாட்டிடுதே
பொல்லாத மாலைப் பொழுது.

—அரங்கநெடுமாறன், வல்லம்.

❁

பொய்கை வளரும்நல் பொற்கமலம் வண்டுகளின்
செய்கை விலக்கிற்று சேமமுடன் — வெய்யவனைப்
புல்லி மகிழ்தல் பொறுக்காமல் வந்ததடி
பொல்லாத மாலைப் பொழுது.

—பெரி. சோமசுந்தரம், குழிபிறை.

❁

ஆற்றுப் புனலும் அருஞ்சேற்றுத் தாமரையும்
நாற்றிசையின் நல்லெழிலும் எல்லாவும் — ஏற்றம்காண்!
நல்லாளே நீயின்றி வேகுதே இங்கிந்தப்
பொல்லாத மாலைப் பொழுது.

— வயணன், காமாட்சிபுரம்.

❁

முல்லை மலர்சிரிக்க முத்தமிடும் வண்டாக
இல்லை எனதன்பர் இங்கிலையில் — ஒல்லையே
கொல்லாமற் கொன்றிடவே கூடுதையோ வான்முகட்டில்
பொல்லாத மாலைப் பொழுது.

—இல. அரவரசன், முகவை.

❁

கன்னல் மொழிபகரும் காதலியைக் கண்டுளொள
இன்பம் தருநிலவு ஏற்புடைத்து — என்மனதைக்
கொல்லாமல் கொல்லுதையோ போஎன்றால் போகாஇப்
பொல்லாத மாலைப் பொழுது.

—செ. கி. செயராமன், செம்மியமங்கலம்.

❁

வேலைமுடி வானவுடன் வீட்டுக்கு வாங்களத்தான்
ஆலைச்சங் கோயுமுன்; அல்லையேல் — சோலையிலே
கொல்லாமல் கொன்றவிடும் கூற்றமாய் வந்தென்னை
பொல்லாத மாலைப் பொழுது.

—ரா. அங்கமுத்து, திருப்பரங்குன்றம்.

❁

செங்கதிரோன் நல்வரவால் செந்தா மரைத்தங்கை
தங்க முகமலருந் தன்மைபோல் — திங்களன்பர்
அல்லியெனை நல்லிரவில் வந்தணைப்பார்; நீங்காதோ
பொல்லாத மாலைப் பொழுது.

—ச. குருசாமி, சத்திரப்பட்டி.

❁

நாட்டின் விடுதலையை நாடியே என்கணவர்
வீட்டைத் துறந்து வெளிச்சென்றார் — வாட்டமது
இல்லா திருப்பதற்கு எண்ணுகையில் போராடும்
பொல்லாத மாலைப் பொழுது.

—கேசரிக்கண்ணன், கோவை.

❁

நெஞ்சத்தில் வாழ்கின்றார் நேர்மைக்குத் தங்கம்தான்
மஞ்சத்தில் குந்திவிடின் மண்சிலைதான — கொஞ்சியென்
உள்ளத்தில் காதலினை ஊட்டாமல் ஏன்வருமோ
பொல்லாத மாலைப் பொழுது.

—அ. சு. மணியன், பெருந்துறை.

❁

என்னைத் தனியிடத்தி லிட்டெங்கோன் போயினபின்
புன்னைமல ரென்னப் புலம்பவோ — முன்னையவர்
சொல்லாத சேதியினைச் செப்பிடற்குத் தோன்றியதோ!
பொல்லாத மாலைப் பொழுது.

—எழிலூர்க்குழலி, திருமயம்.

❁

மானே! மயிலே; மடப்பிடியே! உன்னன்பன்;
தேனே! உனைக்காணத் தேடுகிறான் — வீணாக
செல்லாது நின்று சிரித்து மகிழுதே
பொல்லாத மாலைப் பொழுது

—ந. ப. இளமாறன், திருவிடைமருதூர்.

❁

வரைமீண்டார் வந்துற்றார் வன்கரத்தாற் தொட்டார்
விரைந்தெழுந்தேன் இன்பும் இருந்தேம் — இருள்வரவும்
வல்லார் பிரிந்தாரே வாடினேன் மாள்கஇப்
பொல்லாத மாலைப் பொழுது.

— பீ. மு. அபிபுல்லா, போடியம்பதி.

❁

தொல்பொருள் தேடத் துணைவர் எனைப்பிரிய,
முல்லை முறுவலிக்க, மெனகாற்று — மெல்லவளைத்துக்
கொல்லாமல் கொல்லுதே என்செய்வேன்! அந்தோ!இப்
பொல்லாத மாலைப் பொழுது.

— கு. பெரியசாமி, குடியேற்றம்.

❁

கன்னியைநான் மாலையிட்டுக் காத்திருந்தேன் கங்குலுக்கு!
பின்னி அலங்கரித்தார் பெண்மணியை! — இன்னும்
செல்லாமல் வேடிக்கை செய்யுதே இந்தப்
பொல்லாத மாலைப் பொழுது.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

கானக் குயிலினமும் காவின் மயிலினமும்
நாணக் கலைபுரியும் நல்லிழையாள் — தேனினிமைச்
சொல்லால் மயக்கிடவே சோலையினில் கூடுவது
பொல்லாத மாலைப் பொழுது.

—புவியரசன், காரைக்குடி.

❁

கல்லூரி சென்றவரும் கன்னியெனைச் சோதிக்கக்
கல்லாய் நிலைத்தாரோ காண்தோழீ — நல்லவரும்
இல்லாத இப்பிரிவில் என்நெஞ்சை வாட்டுதிந்தப்
பொல்லாத மாலைப் பொழுது.

—ந. ப. பீ. சவகர்லால்கான், போடிநாயக்கனூர்.

❁

தென்றல் சுவைக்குமென்றும்; தேனே இனிக்குமென்றும்-
குன்று நிலவுநெஞ்சைக் கொள்ளுமென்றும் — இல்லாத
தெல்லாம் எழுதுவதேன்? என்னெஞ்சை வாட்டுதடி,
பொல்லாத மாலைப் பொழுது.

—முத்தூரான், பொள்ளாச்சி.

❁

சோலை மலருதடி சூழ்தென்றல் வீசுதடி
கோலமிகு யௌவனமே கூடுதடி — தோழியென்
உள்ளம் மகிழ்வெய்ய ஊட்டுதடி காதலனைப்
பொல்லாத மாலைப் பொழுது.

—க. இன்பவல்லி, சுந்தராபுரம்.

❁

அத்தானே வேண்டாம் அயல்நாடு; நல்குரவால்
செத்தாலும் அச்சாவு தேன்சாவு — சென்றீரேல்
கொல்லாமல் கொல்லும் கொடுமை மிகச்செய்யும்
பொல்லாத மாலைப் பொழுது.

— பே. சா. தனராசு, நாமக்கல்.

❁

'தங்கம் நிகர்த்தவளே! நட்டாதே!' என்றுரைத்துப்
பொங்கும் பொருள்தேடப் போய்விட்டார் — வெங்கொடுமை!
கொல்லாமல் கொல்லுதடி கோதை எனதுயிரைப்
பொல்லாத மாலைப் பொழுது.

— தேன்மதி, பெத்தநாயக்கன்பாளையம்.

எங்கும் விற்பனையாகிறது!
முல்லை
(ஜூன் இதழ்)
விலை அணா எட்டு.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

198336